விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(சி-7825)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 04 வெள்ளிக்கிழமை (17.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 088

புருசோத்தமன் எழுதும் தமிழரின் தலைவிதி எப்படியாகும்? கட்டுரை உள்ளே...

## இலங்கையில் குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படா நிலை நீடிப்பு



### நம்பிக்கையீனம் என ஐ.நா அறிக்கையாளர் கருத்து

(ஜெனிவா)

வடக்கிலிருந்து இராணுவத்தினரை அகற்றுதல், காணாமல் போனோர் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா ஐசாக் நாடியா தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

# கால அவகாசத்தை பெற்று விட்டோம்

# சர்வதேச நீதிபதிகளை நிராகரிக்கின்றோம்!

## அழுத்தம் தர முடியாது என்கிறார் மங்கள



(கொழும்பு)

நல்லிணக்கத்திலும் பொறுப்புக்கூறலிலும் முன்னேற்றத்தை வெளிக்காட்டுவதற்கு நாங்கள் இரண்டு வருடகால அவகாசத்தை ஐ.நாவிடம் கோரினோம். அந்தக் கால அவகாசம் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே நாங்கள் எமது திட்டத்திற்கேற்ப உள்ளக விசாரணையை சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பின்றி முன்னெடுக்கவே எதிர்பார்க்கின்றோம் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்கம் பார்க்க...)

## தாஜுடீன் கொலை; பதிவுகள் மாயம்

(கொழும்பு)

றக்பி வீரர் வஸீம் தாஜுடீன் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்றுக்குரிய ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு பதிவுப் புத்தகத்தின் பல பக்கங்கள் திட்டமிட்டு கிழிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கேர்ணல், மேஜர் தர அதிகாரிகள் உள்ளிட்ட

24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணை கோரி கவனயீர்ப்பு போராட்டம்



24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத்துக்கு இடையூறின்றி போராட்டம் நடத்த அனுமதி!

### முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு

(பனிக்கன்குளம்)

வீதி போக்குவரத்துக்கு இடையூறு இன்றியும் இராணுவ செயற்பாடுகளுக்கு இடையூறு இன்றியும் பங்கம் விளைவிக்காது சாத்வீக போராட்டத்தை நடத்துவதற்கு முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி எஸ். எம்.எஸ்.சம்சுதீன் உத்தரவு பிறப்பித்துள்ளார்

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு இராணுவ முகாமுக்கு முன்பாக நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் நேற்றைய தினம் கரு

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசாங்கம் நிர்வாணமாக செல்லவேண்டியிருக்கும்!

### கூட்டு எதிரணி எச்சரிக்கை

(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல் ஊழல் தொடர்பில் விசாரணை செய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டதாலேயே இந்த அரசாங்கத்திற்கு ஆடையுடன் வீதியில் செல்ல முடிந்துள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

இந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லையாயின் அரசாங்கம் நிர்வாணமாகவே செல்ல வேண்டி ஏற்படுமென நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டு எதிர்க்கட்சி

23ஆம் பக்கம் பார்க்க....

## டெங்கு தாக்கம் கிழக்கில் தீவிரம்

### 3ஆயிரத்து 821 பேர் பாதிப்பு

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் இதுவரைக்கும் 3ஆயிரத்து 821 பேர் டெங்கு நோயின் தாக்கத்திற்கு உள்ளானதாகவும், அதில் திருகோணமலையில் 2ஆயிரத்து 088 பேரும், மட்டக்களப்பு

23ஆம் பக்கம் பார்க்க....

## தென்.மீனவர்களுக்கு கூடுதலான அனுமதி

(முல்லைத்தீவு)

நாயாறுப் பகுதியில் இவ்வாண்டுத் தொழில் நடவடிக்கைகளில் தென்னிலங்கை மீனவர்களை கூடுதலாக அனுமதிக்கும் செயற்பாட்டில் கடற்றொழில் திணைக்களம் ஈடுபடுவதாக வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம்

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்

தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளரால் மீள்குடியேற்ற பிரதேசங்களில் பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகள் அகற்றுவதற்காக கனரகவாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் - 2017 எனும் செயற்பாட்டிற்காக தகைமையுடையோரிட மிருந்து விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

விலைக் கேள்வி அறிவித்தல் - நிபந்தனைகள் மற்றும் மேலதிக தகவல்கள்

1. விலைக் கேள்வியானது தேசியவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
2. கனரகவாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் மணித்தியாலத்திற்கு மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலையில் கொடுப்பனவு அந்நிறுவனத்தின் பெயரில் வழங்கப்படும் என்பதுடன் காத்திருத்தல் கட்டணம் எதுவும் மேலதிகமாக வழங்கப்படமாட்டாது.
3. வாகனங்களுக்கான எரிபொருள், சாரதிகளுக்கான கொடுப்பனவுகள், பழுதுபார்த்தல் செலவீனங்கள் வேலைத்தளத்திற்கு வாகனங்களினை எடுத்துச்செல்வதற்கான கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.
4. வாகனங்களின் சட்டரீதியான உரிமையுடையவர்கள் மட்டும் கேள்வி விண்ணப் பத்தை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் வாகனத்தின் பதிவுப்புத்தகத்தின் பிரதி மற்றும் வியாபார பதிவுச்சான்றிதழ் பிரதி என்பன கேள்வி ஆவணங்களுடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
5. அத்தியாவசிய தேவையின் பொருட்டு வாகனங்கள் உடனடியாக சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதால் கேள்வி ஆவணங்கள் திறக்கப்பட்ட தினத்திலிருந்து விலைக் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்கள் அனைத்தும் இயங்கு நிலையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் திணைக்கள தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவினர் பார்வையிடுவதற்கு காண்பிக்க தயாராக இருத்தல் வேண்டும்.
6. சேவையில் ஈடுபடுத்தப்பட்ட கனரகவாகனத்தினை குறித்த வேலை பூர்த்தியடைய முன்னர் சேவை நிலையத்திலிருந்து மீளப் பெற்றுக் கொள்ள முடியாது.
7. சேவையில் ஈடுபடும் வாகனங்கள் பழுதடையும் சந்தர்ப்பத்தில் உடனடியாக அதே தரத்திலுள்ள மாற்று வாகனத்தினை பயன்படுத்தி குறித்த வேலைகள் தடையின்றி நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
8. குறித்த வேலைகளினை தாமதமின்றி மேற்கொள்வது தங்கள் கடமை என்பதுடன் ஏதாவது காரணங்களினை காட்டி வேலைகளினை தாமதப்படுத்த முடியாது.
9. குறித்த வேலைகளினை எம்மால் குறிப்பிடப்படும் காலப்பகுதிக்குள் முடிவுறுத் தப்படாதவிடத்து அல்லது குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளிற்கு கட்டுப்படாதவிடத்து தங்களது சேவை முன்னறிவித்தலின்றி முடிவுறுத்தப்படும்.
10. பூர்த்திசெய்யப்பட்டு பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் "தவிசாளர் பெறுகைக் குழு, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 2017.03.31 திகதியன்று பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் ஒப்பமிடல் வேண்டும்.
11. காலந்தாழ்த்தி கிடைக்கப்பெறும் விலைக்கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள் விதாரர்கள் தபாலுறையின் இடதுமேல் மூலையில் "பற்றைக்காடுகள், இடிபாடு கள் மற்றும் மண் அணைகள் அகற்றுவதற்காக கனகரவாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் -2017" என்ற வாசகத்தினை குறிப்பிடுதல் வேண்டும்.
12. விலைக்கேள்விகள் யாவும் மேல்குறிப்பிடப்பட்ட முகவரியில் 2017.03.31 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் விலைக்கேள்வி மனுக்களை சமர்ப்பித்தவர்கள் அல்லது அவரினால் எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.
13. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றையும் மீளளிக்கப்படாத தொகையான 1000 ரூபாவை கட்டணமாக மாவட்ட செயலக வங்கிக்கணக்கு இலக்கம் 7041946 செலுத்திய பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து 2017.03.20 ஆந் திகதி முதல் 2017.03.30 ஆந் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) - தொலைபேசி இலக்கம் 021 222 4029 அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
14. கேள்வி கோரப்பட்ட வாகனங்களின் வகை, இயங்கு நிலை தொடர்பான முற்கூட்டம் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணத்தில் 28.03.2017 அன்று மு.ப 9.30 மணிக்கு நடைபெறும்.
15. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித்தீர்மானத்திற்கமைவானதாகும்.

| கேள்வி இல. | வேலை விபரம் | மீளளிக்க கூடிய வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|---|
| JF/RES/Tend.Land/III/5/2017 | மீள்குடியேற்ற பிரதேசங்களில் பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகள் அகற்றுவதற்காக கனரகவாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் 2017 | 25.000.00 | 1.000.00 |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
மாவட்டச்செயலகம்,
யாழ்ப்பாணம்

சு.முரளிதரன்
மேலதிக அரசாங்க அதிபர் (காணி),
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C-7138)

# வவுனியா வேலையற்ற பட்டதாரிகளை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட அரச வேலையற்ற பட்டதாரிகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று தொடக்கம் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தின் வவுனியா மாவட்ட பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இப்பதிவானது தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறுவதுடன் இப்பதிவு நடவடிக்கைகளின் இறுதித் தினமாக எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக் கிழமை அறிவிக்கப் பட்டுள்ளது.

எனவே இது வரை பதிவுகளை மேற் கொள்ளாத வேலையற்ற பட்டதாரிகள் குறித்த பதிவு நடவடிக்கையில் இணைந்து கொள்ளுமாறும் ஏனைய பதியாமல் உள்ள சக வேலையற்ற பட்டதாரிகளுக்கும் இவ் விடயத்தை அறிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

தற்போது வரை 91 பட்டதாரிகளே பதிந்துள்ள நிலையில் அவசரமாக வவுனியா மாவட்ட ஏனைய வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் உடனடியாக கிராம சேவையாளரிடம் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணத்துடன் (வேலையற்ற நிலை தொடர்பாக) வருகை தந்து பதிவு செய்யுமாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பதிவு நடவடிக்கையானது வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தின் வவுனியா மாவட்ட பிரதிநிதி மற்றும் வவுனியா மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற ஆக்கபூர்வமான கலந்துரையாடலின் பிரதிபலனாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

உ
சிவமயம்

**புளியம்பொக்கணை**
**நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை**
**கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை**
**நாகதம்பிரான் ஆலய பங்குனி**
**உத்தரப் பொங்கல் விழா சம்பந்தமான**

## மீளாய்வுக் கூட்டம்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 09.04.2017ந் திகதி நடைபெறவுள்ளது.

பொங்கல் உற்சவம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 20.03.2017ந் திகதி மு.ப 10.30 மணிக்கு ஆலய முன்றலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு. சுந்தரம் அருமைநாயகம் அவர்களின் தலைமையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள், போக்குவரத்துத் துறையினர் மற்றும் ஒழுங்கமைப்பு பணியில் ஈடுபடும் தொண்டர்கள், தொடர்புடைய நிறுவனங்கள் பரிபாலன சபையினர் ஆகியோரை கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கியுதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**வீ. இராமநாதன்**
**தலைவர்**

**தி. பிரபாகரன்**
**செயலாளர்**

ஆலய பரிபாலன சபை
**நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை** (C-7833)

உ
சிவமயம்

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்**
**ஆனைப்பந்தி**

## வருடாந்த பொதுக் கூட்டம்

காலம் : இன்று (17.03.2017) வெள்ளிக்கிழமை
நேரம் : பி.ப 1.30 மணி

**நிகழ்வுகள்**

தலைமையுரை : சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்
செயலாளர் அறிக்கை : 2016ம் ஆண்டுக்கான செயலாளர் அறிக்கை
பொருளாளர் அறிக்கை : 2.30 மணி

அனைத்து அந்தண குருமார்களையும்
கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

**முக்கிய குறிப்பு: குறித்த நேரத்தில் கூட்டம் நடைபெறும்.**

தலைவர்
சிவஸ்ரீ
ப. மனோகரக் குருக்கள்

செயலாளர்
பிரம்மஸ்ரீ
சோ. கேதீஸ்வர சர்மா

(8338)

## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையை 01.04.2017 - 31.03.2018 வரையான காலப் பகுதிக்கு நடாத்துவதற்கு தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து/நபர்களிடமிருந்து விண்ணப் பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் நடாத்த விரும்புவோர் மேல் நீதிமன்றக் கணக்கீட்டு அலுவலகத்தில் மீளளிக்க முடியாத விண்ணப்பப் பணம் ரூபா 100/= ஐச் செலுத்தி எதிர்வரும் 29.03.2017 புதன்கிழமை பி.ப 4.15 மணி வரை பெற்றுக் கொள்ள லாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 30.03.2017 பிற்பகல் 12.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

**மா. இளஞ்செழியன்**
**மேல்நீதிமன்ற நீதிபதி/பெறுகைக்குழுத் தலைவர்,**
**மேல் நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-7834)

## பழைய புத்தகங்களை கொள்வனவு செய்யும் நிறுவனங்களை பதிவு செய்தல் வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்

பாடசாலையில் பயன்படுத்தி பாவிக்க முடியாத புத்தகங்களை கொள்வனவு செய்யும் நிறுவனங்களை பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. உரிய விண்ணப்பங்களினை 03.04.2017ம் திகதிக்குள் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். விண்ணப்ப படிவங்களை யாழ்ப்பாணம், வலயக் கல்விப் பணிமனையின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**ந.தெய்வேந்திரராஜா**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(C-7830)

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நல்லூரில் கவனயீர்ப்புப் போராட்டம்








(படங்கள்- உ.சாளின்)

(யாழ்ப்பாணம்) — இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணைப் பொறிமுறையைக் கோரி வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் நேற்றையதினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டம் நல்லூர் ஆலயம் முன்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. முற்பகல் 10 மணியளவில் நல்லூர் ஆலயம் முன்பாக ஆரம்பமாகிய போராட்டம் கோயில் வீதியூடாக பேரணியாகச் சென்று ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் கையளிக்கப்பட்டது. (இ-4)



## காணாமற்போனோரின் உறவுகள் வடமராட்சி கிழக்கில் போராட்டம்



யாழ். வடமராட்சி கிழக்கில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் காலவரையறையற்ற கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 2ஆவது நாளாகவும் தொடர்ந்தது. (இ-15)

## சில ஹோட்டல்களில் உண்பவர்கள் இன்னும் உயிர்வாழ்வது ஆச்சரியம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

நாட்டிலுள்ள சில ஹோட்டல்களுக்கு சென்று சமையல் செய்வதனைப் பார்த்தால், அந்த ஹோட்டலில் உணவு உண்பது குறித்து நினைத்துக் கூட பார்க்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இவ்வாறான ஹோட்டல்களில் சமைக்கும் உணவுகளை உண்பவர்கள் இதுவரையில் உயிர்வாழ்வதும் பெரிய ஆச்சரியமான ஒன்று எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

உலக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விசேட நிகழ்வு கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள உணவு சமைக்கும் ஹோட்டல்களின் சமையல் அறைக்குச் சென்றால் சாப்பிட மனம் வருவதில்லை. இதுதான் உண்மையான நிலை. கடந்த வருடத்தில் ஹோட்டல் ஒன்றை சோதனையிட அதிகாரிகள் சென்ற போது, பரிமாறுவதற்காக சமைத்திருந்த ரொட்டியை சமையல் அறையிலுள்ள ஊழியர் ஒருவர் தலைக்கு வைத்து தூங்கிக் கொண்டிருந்துள்ளார்.

இதனைத் தான் எமது நாட்டு மக்கள் உண்கிறார்கள். இதனைச் சாப்பிடுபவர்கள் உயிருடன் வாழ்வது ஆச்சரியம் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு சமுகமளிக்க முடியாது மகிந்த அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாரிய ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சமுகமளிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வருகைதர முடியாது என அவரது சட்டத்தரணியின் மூலமாக ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.



இந்நிலையில் எதிர் வரும் 24 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் வாக்குமூலமளிப்பதாக மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தில் விளம்பரங்கள் ஒளிபரப்பியதில் ஏற்பட்டுள்ள மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்வதற்காகவே மகிந்தவுக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

## வடமாகாண பட்டதாரிகளின் போராட்டம் தொடர்கிறது

அரச நியமனம் கோரி வடக்கு மாகாண பட்டதாரிகள் நேற்று பதினெட்டாவது நாளாகவும் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக போராட்டம் நடத்தியிருந்தனர். இந்த போராட்டத்தில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் ஈடுபட்டுள்ள நிலையில், தமக்கான தீர்வு கிடைக்கும் என இரவு பகலாக போராட்டம் நடைபெறும் எனவும் அறிவித்துள்ளனர்.

(படங்கள்- உ.சாளின் )





## மிஹிந்தலை முன்னாள் பிரதேச சபை உறுப்பினருக்கு 19 வருட கடூழிய சிறை

(கொழும்பு)

மிஹிந்தலை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அனில் புஷ்பானந்தவுக்கும் மற்றுமொரு சந்தேக நபருக்கும் 19 வருடங்களும் 6 மாதங்களுக்கும் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மிக நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் வட மத்திய மாகாண உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்த தீர்ப்பை வழங்கினார்.

வட மத்திய மாகாண சபை தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி அநுராதபுர மாவட்ட முகாமையாளர் வைத்தியர் ராஜா ஜோன் புள்ளேயின் வீட்டுக்கும், காரியாலயத்துக்கும், வைத் திய நிலைய த்துக்கும் தீ வைத்த சம்பவம் தொடர்பிலேயே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குற்றவாளிகளுக்கு 20,000 ரூபா தண்டனை விதிக்கவும் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவரை விடுவிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

# ஸ்மித் சதம் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் வலுவான நிலையில் அவுஸ்திரேலியா



ஸ்ரீபன் ஸ்மித்தின் பொறுப்பான சதம் மூலம் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டின் முதல் நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி வலுவான நிலையில் உள்ளது.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது.


இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் அவுஸ்திரேலிய அணி நேற்றைய ஆட்டநேர முடிவின் போது 4 விக்கெட்டுகளை இழந்து 299 ஓட்டங்களை பெற்றுள்ளது.

அவுஸ்திரேலிய அணிசார்பில் அணித் தலைவர் ஸ்ரீபன் ஸ்மித் 117 ஓட்டங்களையும், கிலேன் மக்ஸ்வெல் 82 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத் தாடி வருகின்றனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில் உமேஸ் யாதவ் 2 விக்கட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# இலங்கை பலமான அடித்தளம் போராடுகின்றது பங்களாதேஷ்



பங்களாதேஷ்க்கு எதிரான 2-வது டெஸ்டில் சண்டிமல் சதத்தால் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 338 ஓட்டங்கள் சேர்த்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பி.சரா ஓவல் மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் 7 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் இலங்கை அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்தது.

ரங்கன ஹேரத் 18 ஓட்டங்களுடனும் தினேஸ் சண்டிமல் 86 ஓட்டங்களுடனும் நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

இலங்கை அணி 305 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் ஒன்பதாவது விக்கெட்டினை இழந்தது.

டெஸ்ட் அரங்கில் தனது எட்டாவது சதத்தினை எட்டிய தினேஸ் சண்டிமல் 138 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இலங்கை அணி மேலதிகமாக 33 ஓட்டங்களைப் பெற்ற போதும் இறுதி விக்கெட்டினை இழந்தது.

சுராங்க லக்மால் 35 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

பந்துவீச்சில் மெஹிடி ஹசன் மிராஸ் 3 விக்கெட்டுக்களையும் சஹிப் அல் ஹசன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய பங்களாதேஷ் அணி நேற்றைய நாள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 214 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# வாகன விபத்து; முதியவர் காயம்

மட்டுவில் கனகம்புளியடிச் சந்தியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்ட விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த க.நடராசா (வயது 68) என்பவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவர் நுணாவில் பகுதியில் இருந்து புத்தூர் பகுதி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனது மோட்டார் சைக்கிளை திருப்ப முற்பட்ட போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதுண்டதில் மேற்படி விபத்து நேரிட்டுள்ளது.

இந்நிலையில் விபத்து தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-89)

# டெங்கு அபாய வலயமாக திருகோணமலை பிரகடனம்
## 700 இராணுவத்தினர் களத்தில்

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் துரிதமாக பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்த 700 இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தோடு திருகோணமலை மாவட்டம் டெங்கு அபாய வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாகவும், நிலைமை மேலும் விபரீதமாகாமல் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாகவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் ஆலோசகர் டாக்டர் எஸ்.அருள்குமார் தெரிவித்துள்ளார்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கொழும்பிலிருந்து வைத்திய நிபுணர்களின் குழுவொன்று கிண்ணியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது எனவும் சுகாதார அமைச்சு தகவல்வெளியிட்டுள்ளது. (செ-11)

# ஆசிரியர் சேவையில் 50 ஆயிரம் வெற்றிடம்

(கொழும்பு)

நாட்டின் கல்வித்துறையில் நிலவும் சுமார் 50ஆயிரம் வெற்றிடங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் சேவையில் நிலவும் 50 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையில் சேவையாற்றுவதற்கு சுமார் 238 பேருக்கு புதிய நியமனம் மற்றும் பதவி உயர்வு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டுள்ள போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக வரவு செலவுத் திட்டத்தில் 2 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, விளையாட்டுத் துறை பயிற்றுவிப்பாளர்களாக 3850 பேரை பயிற்றுவித்து சேவையில் இணைத்துக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் கல்வி நிலையங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நாடளாவிய ரீதியில், 700 பாடசாலைகளின் பௌதிக வளங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தார். (செ-11)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்

நுண்கலைமாணி (சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2016/2017 தகுதிகாண் (செய்முறை) பரீட்சை

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தகுதிகாண் (செய்முறை) பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

| கற்கைநெறி | பரீட்சைகள் நடைபெறும் திகதி | பரீட்சை மண்டபம் | நேரம் |
|---|---|---|---|
| இசை | 20.03.2017 - 01.04.2017 | இசைத்துறை விரிவுரை மண்டபம், இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார்மடம், சுன்னாகம் | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| நடனம் | 20.03.2017- 31.03.2017 | நடேசர் அரங்கு, இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார்மடம், சுன்னாகம் | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| சித்திரமும் வடிவமைப்பும் செய்முறை | 28.03.2017 - 31.03.2017 | சித்திரமும் வடிவமைப்பும் அலகு, இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார்மடம், சுன்னாகம் | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| சித்திரமும் வடிவமைப்பும் எழுத்துப்பரீட்சை | 01.04.2017 | 1.E- Hall (வெளிவாரி பரீட்சை மண்டபம்) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், கம்பஸ் வீதி, திருநெல்வேலி<br>2.வர்த்தக மண்டபம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கம்பஸ் வீதி, திருநெல்வேலி | பி.ப 2.00 |

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு உதவிப்பதிவாளர் /அனுமதிகள் கிளையுடன் 0212226714 என்ற தொலைபேசி எண் வழியாக தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
16.03.2017

(சி-7828)


# வெள்ளை வானில் கடத்தப்பட்ட என் மகளுக்கு என்ன நடந்தது?
## சந்திரிகாவிடம் தாயொருவர் கேள்வி

எனது பெண் பிள்ளையை வெள்ளை வானில் கடத்தி சென்று குருநகர் சின்னக்கடையில் அமைந்திருந்த இராணுவ முகாம் ஒன்றில் தான் வைத்திருந்தார்கள். அதன் பின்னர் எனது பிள்ளையை காணவில்லை. இந்த சம்பவம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் தான் நடைபெற்றது. தற்போது அவர் நல்லிணக்கத்துக்கு பொறுப்பாக உள்ளார். அவரால் எனது பிள்ளை எங்கே என கூற முடியாதா? என இரண்டு பிள்ளைகளின் தாயாரான செல்லையா நீற்றாம்மா கவலையுடன் தெரிவித்தார்.

இலங்கை மீது சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணை பொறிமுறை நடத்தபட வேண்டும் என வலியுறுத்தி நேற்றைய தினம் நல்லூரில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போதே குறித்த தாய் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எனது மூத்த பிள்ளையின் பெயர் செல்லையா கொன்ஷி (கடத்தப்படும் போது வயது 24). இவர் 1996 ஆம் ஆண்டு வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டிருந்தார்.

நாங்கள் குருநகரில் தான் வசித்து வந்தோம். எனது மகள் கடத்தப்படும்போது இங்கு புலிகள் இல்லை.

1996 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி எங்களது வீட்டிலிருந்து தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு சென்றுள்ளார்.

இதன் போதே எமது வீட்டுக்கு வந்த வெள்ளை வான் எனது மகளை கடத்தி சென்றது. எனது மகள் தாதியம் படித்து கொண்டிருந்த நிலையிலேயே இச்சம்பவம் நடந்தேறியது.

எனது மகள் கடத்தப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர், குருநகர் சின்னக்கடை இராணுவ முகாமிலிருந்த இர்ாணுவத்தினர் மகளை பிடித்து சென்றிருந்தனர். எனினும் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் குறித்த இராணுவ முகாமுக்கு சென்று கையெழுத்து வைத்து கொண்டிருந்தார்.

இந்த நிலையிலேயே எனது மகள் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டார்.

எனது மகள் கடத்தப்பட்ட காலத்தில் சந்திரிகா அம்மையாரே ஜனாதிபதியாக இருந்தார். இப்போது அவர் உயர் பதவியில் நல்லிணக்கத்துக்கு பொறுப்பாக இருக்கின்றார். அவரால் எனது பிள்ளையை மீட்டு தர முடியாதா? நல்லிணக்கத்துக்கு பொறுப்பாக இருக்கும் அவர் தான் எனது பிள்ளை கடத்தப்படுவதற்கு காரணம்.

எனவே எனது பிள்ளை கடத்தப்பட்டதற்கு அவர் தான் பதில் சொல்ல வேண்டும். எனது பிள்ளையை மீட்டுத்தர வேண்டிய பொறுப்பும் அவருடையதே என அந்த தாய் கண்ணீருடன் தெரிவித்தார். (செ-4)




கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரினது உறவுகளின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று வியாழக்கிழமை 25ஆவது நாளாகவும் கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்பாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப் பட்டுள்ள பின்வரும் சான்றுப்பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2 மாத காலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும்படி குற்றவியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் 431(2)இன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

வழக்கு இலக்கம் AR/273/17 சான்றுப் பொருள் இலக்கம் PR/305/17 69317941 இலக்க கொவியூட்டி வர்க்க துவிச்சக்கர வண்டி-1, மறுதவணை 22.05.2017. வழக்கு இலக்கம் AR/289/17, சான்றுப் பொருள் இலக்கம் PR/52/16 133-9705 இலக்க HONDA வர்க்க மோட்டார் சைக்கிள்-1. மறு தவணை: 22/05/2017 என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S.சர்மா குருஜீ
077 784 1558
(8168)

25 YEARS OF SERVICE EXCELLENCE
BIG SALE
1991-2016
செய்மதி தொலைக்காட்சி சேவை
(direct to home)
டிஷ் அன்டெனா மூலம் (digital sd/hd) தரத்தில் இடையூறு அற்ற முறையில் குறைந்த கட்டணத்தில் (ரூபாய் 400/- தொடக்கம்) உங்கள் விருப்பம் போல் டிவி சனல்களை கண்டுகளிக்கக்கூடிய FULL செட் 1 வருட உத்தரவாதத்துடன்
SATS - TECH ENGINEERS
298, K.K.S ROAD, JAFFNA.
PHONE:- 021 222 8812/071 098 6224
Rs. 3000/-*
(C-7798)



தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம்
35 ஆம் ஆண்டு நிறைவு விழா

தலைவர் : செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
காலம் : 17.03.2017
நேரம் : பி.ப 3.00மணி
இடம் : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம். அன்னபூரணி மண்டபம்.
பிரதம விருந்தினர் : பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர் : கௌரவ வ.க.ஜீவராணி (கௌரவ நீதவான், சிறுவர் நீதவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்)
கௌரவ விருந்தினர் : திருமதி. கமலராணி கிருஷ்ணபிள்ளை (அதிபர், யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை.
- நிர்வாக சபை

35th ANNIVERSARY
(C-7822)

சீ பேங்க் சேவிங்க்ஸ் ப்ளஸ் நிதியம்
உங்கள் சேமிப்புக்கு கவர்ச்சிகரமான வருவாய்
10.7% (P.A) சீ பேங்க் சேவிங்க்ஸ் ப்ளஸ்
வருடாந்த மொத்த விளைவு (28 பெப்ரவரி 2017 இல்)
- பாரம்பரிய சேமிப்புக் கணக்கினை விட மேலதிக விளைவுகள்
- வரி இலவச விளைவுகள்
- பணத்தினை இலகுவாக மீளப்பெறும் வசதி
மேலதிக தகவலுக்கு
குமுது 071 066 2007 சுபாஷினி 071 066 2077
NSB BANK OF CEYLON C uti
Ceybank ASSET MANAGEMENT LTD
54/C1, கொழும்பு 07.
www.ceybank.com
info@ceybank.com
*தற்போதய வருடாந்த வருவாய் விகிதம் சந்தை நிலைமைகளுக்கேற்ப எதிர்காலத்தில் மாற்றமடையலாம். கடந்த கால வருவாய் வீதங்கள், எதிர்கால வருமானங்களுக்கான குறிகாட்டி அல்ல.

## இராசி பலன்

17.03.2017
(பங்குனி 04 வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 3.01 மணிவரை
விசாகம் பின்னிரவு 2.52 மணிவரை
சுபநேரம் 6.19-7.49 மணிவரை
இராகுகாலம் 10.49-12.19 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத, சுக் | செவ் | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி இரவு 8.09 மணிக்கு விருச்-சந் | | |
| | | | ராகு |
| | சனி | சந் | குரு |

**மேடம்:** புகழ் கூடும் நாள், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**இடபம்:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** தொலைபேசி வழியில் மனம் மகிழும் தகவல்கள் வந்து சேரலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கடகம்:** நினைத்தது நிறைவேறும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**சிம்மம்:** நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், சகோதர ஒற்றுமை பலப்படும்.

**கன்னி:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**துலாம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணப்பிரச்சினைகள் தீரும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியுண்டு.

**விருச்சிகம்:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


**தனுசு:** குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** தொலைபேசி வழித் தகவல் மனக்குழப்பத்தை குறைக்கும், வீண்பழிகள் அகலும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல்நலனில் கவனம் தேவை, திருடர் பயமுண்டு.

# இலங்கை குறித்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குமாறு ஏனைய நாடுகளுக்கு அமெ.அழைப்பு



இலங்கையில் நல்லிணக்கத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்காக, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப் பட்டுள்ள தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குமாறு, ஏனைய நாடுகளுக்கு அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து வோஷிங்டனில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பதில் பேச்சாளர் மார்க் ரோனர் கருத்து வெளியிடுகையில்,

"இலங்கையில் நல்லிணக்கத்தை ஊக்குவிக்க மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் மேற்கொண்டுள்ள தொடர்ச்சியான முயற்சிகளை அமெரிக்க அரசாங்கம் பாராட்டுகிறது.

இலங்கையில் அனைத்து மக்களுக்கும் நீதி மற்றும் அமைதியை ஏற்படுத்தும், எங்களது நீடித்த அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில், இலங்கையில் நல்லிணக்கம், மனித உரிமைகள், பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் தீர்மான வரைவு கடந்த திங்கட்கிழமை, ஏனைய நட்பு நாடுகளுடன் இணைந்து ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது.

இந்த தீர்மான வரைவுக்காக, பிரித்தானியா, மொன்ரனிக்ரோ, மசிடோனியா மற்றும இலங்கையுடன் அமெரிக்கா நெருக்கமாக இணைந்து பணியாற்றியுள்ளது.

மோதல்கள் மீண்டும் நிகழாமை, ஜனநாயக ஆட்சியைப் பலப்படுத்தல் மற்றும் எல்லா இலங்கையர்களுக்குமான சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில், இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் நீதியை ஏற்படுத்துவதற்கு உதவும், இந்த வரைவை நிறைவேற்ற எதிர்பார்க்கிறோம். தீர்மானத்துக்கு மீண்டும் ஒருமுறை இணை அனுசரணை வழங்க இலங்கை இணங்கியிருப்பது மகிழ்ச்சி. இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கு ஆதரவு அளிக்கும் எண்ணம் கொண்ட ஐ.நா. உறுப்பு நாடுகள் அதனை நிரூபிக்கும் வகையில், தமது பெயர்களை இணை அனுசரணையாளர்களின் பட்டியலில் இணைத்துக் கொள்ள அழைக்கிறோம் என்றும் தெரிவித்தார். (இ-7)


தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும்

## கம்பன் விழா 2017



நாளை 18.03.2017
தமிழ்க்கோட்டம்
(கம்பன்கல்லூரி வளாகம்)
சங்கத்தானை, சாவகச்சேரி.
சனி மாலை 4.30 மணி

திருநாள் மங்கலம்
கம்பன் திருவுருவப்பட ஊர்வலம்
(அருள்மிகு வைரவசுவாமி கந்தசுவாமி கோவிலிலிருந்து...)

மங்கல இசை : சித்தார்த்தன், பிரதித்தன் குழுவினர் (இசைப்பேரறிஞர் எம்.பஞ்சாபிகேசன் பேரப்புதல்வர்கள்)
மங்கல விளக்கேற்றல் : திரு.யோ.அர்ச்சுனன் தம்பதியர் (வங்கியாளர், தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை)
கடவுள் வாழ்த்து : திரு.சி.சிவமைந்தன்
தலைமையுரை : கலாநிதி ஆறு. திருமுருகன் (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
சான்றோர் கௌரவம் : கௌரவம் பெறும் சான்றோர் வைத்தியகலாநிதி சு.சி.அருளானந்தம்

பட்டிமண்டபம்

நடுவர்: கம்பவாரிதி இ.ஜெயராஜ்
பொருள்: "கற்போர் மனதில் களிநடம் புரியும் கம்ப பாத்திரம்"

| பரதனே! | அனுமனே! | கும்பகர்ணனே! |
|---|---|---|
| இரா.செல்வவடிவேல் | த.நாகேஸ்வரன் | ந.விஜயசுந்தரம் |
| பரா.ரதீஸ் | அ.வாசுதேவா | ச.மார்க்கண்டு |

C-7823

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


# தகுதி அடிப்படையில் தான் வடக்கில் வேலை வாய்ப்பு

## உறுப்பினர் சிவயோகன் தெரிவிப்பு




பின் கதவால் வேலை வாய்ப்புக்கள் எதனையும் நாம் கொடுக்கவில்லை. தகுதியின் அடிப்படையில் பரீட்சை வைத்தே வேலை வாய்ப்புக்களை வழங்கி வருகின்றோம் என வடமாகாண சபை உறுப்பினர் வி.சிவயோகன் தெரிவித்தார். இமையாணன் பகுதியில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திறப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், நாம்தேர்தல் வாக்குறுதிகளில் கூறியது போல தகுதியின் அடிப்படையில் பரீட்சைகள் வைத்தே வேலைவாய்ப்பைவழங்கிவருகின்றோம். கடந்த அரசாங்கம் செய்தது போல பின்கதவாலும்தகுதியற்றவர்களுக்கும்வேலைவாய்ப்பை நாம் வழங்க மாட்டோம். ஒழுங்காக நீதிச் சட்டத்தின் படி வழங்கி வருகின்றோம். ஒருமாத காலத்தில் எங்களுக்கு என ஒரு பத்திரிகை வெளிவர இருக்கிறது. அது வெளிவந்ததும் மாகாண சபையைப் பற்றி வெளிவராத உண்மைகளை வெளிப்படுத்துவோம் என அவர்மேலும்தெரிவித்தார். (இ-3,60)

# சவால்களுக்கு மத்தியில் வடக்கில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

## சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் சுட்டிக்காட்டு



பல சவால்களுக்கு மத்தியிலேயே வடமாகாண சபை ஊடாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். கடந்த ஆட்சியில் எமது மாகாண சபைக்கு முட்டுக்கட்டைகள் தடைகளைப் போட்டார்கள். அத்தனை முட்டுக்கட்டைகள் தடைகளையும் தாண்டிப்போக வேண்டிய நிலை இருந்தது என வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

கரவெட்டி இமையாணன் பகுதியில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்திறப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், காணியினை வழங்கி மதிலை அமைத்து கொடுத்ததற்காக உங்களுக்கு முதலில் நன்றி கூறி வைக்கின்றேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் எமது மாகாண சபையின் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாதவாறு முட்டுக்கட்டைகள் தடைகள் போட்டார்கள். அதனையும் தாண்டி போக வேண்டியிருந்தது. 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஓரளவு முட்டுக்கட்டைகள் நீங்கின. ஆனால் அவை முழுமையாக நீங்காவிட்டாலும் வேலைத்திட்டங்களை செய்யக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. வடமாகாண சபையைப் பொறுத்த வரையிலேயே நூற்றுக்கு நூறு வீதம் மத்திய அரசிலேயே தங்கியிருப்பது எமக்கு பாரிய பிரச்சினையாக உள்ளது. யுத்தத்திற்கு காரணமான அடிப்படைப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை. அது இருந்த கொண்டுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3,60)

# இனி யாரும் அத்துமீற முடியாது!

மீண்டும் இந்திய மீனவர் ஒருவர் படுகொலை. தங்கச்சி மடத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில், பிரிட்ஜோ என்கிற இளம் மீனவர் மரணம் அடைந்திருக்கிறார். முறையான விசாரணை நடத்தப்படுவதற்கு முன்பாகவே, துப்பாக்கிச்சூடு நடத்தியது இலங்கைக் கடற்படை அல்ல" என இலங்கை அரசு அவசரமாகச் செய்தி வெளியிடுவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இந்தியா - இலங்கை கடல் எல்லையில் நடந்த துப்பாக்கிச்சூட்டை இலங்கைக் கடற்படை நடத்தவில்லை என்றால், யாரால் அது நடத்தப்பட்டது? இதை விசாரித்து, யார் குற்றவாளி எனத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் மீனவர் படுகொலைகள் நடந்தன. மோடி பிரதமராகப் பொறுப்பேற்றவுடன் தமிழக மீனவர் ஒருவர்கூட இலங்கை அரசால் சுடப்படவில்லை' எனப் பெருமை பேசிய பா.ஜ.க., விழித்துக்கொள்ளவேண்டிய நேரம் இது.

சென்ற ஆண்டு மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கத்தோடு, டில்லியில் இந்தியா-இலங்கை மீன்வளத் துறை அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில், எல்லை தாண்டும் தமிழக மீனவர்கள் மீது, இலங்கை ராணுவம் தாக்குதல் நடத்தாது" என இலங்கை அரசின் சார்பாக உறுதிமொழி அளிக்கப்பட்டது.

மேலும், கடலோரக் காவல்படையினர் மீனவர்களைக் கையாளும்போது, வன்முறையோ அத்துமீறலோ நடைபெறக் கூடாது' என மீனவர் சங்கங்கள் வைத்த கோரிக்கையையும் ஏற்றுக்கொள்வதாக இலங்கை அரசு தெரிவித்தது. இந்தக் குழு, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடும். இரு நாட்டு மீன்வளத் துறை அமைச்சர்களிடையில் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சந்திப்பு நடைபெறும்" என்றும் முடிவுசெய் யப்பட்டன.

ஆனால், இத்தனைக்குப் பிறகும் ஒரு இந்திய மீனவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருக்கிறார் என்றால், அதற்கு யார் பொறுப்பு? நடந்த கூட்டுக்கூட்டத்துக்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கும் என்ன அர்த்தம்? ஏன் தொடர்ந்து கூட்டுக்கூட்டங்கள் நடத்தப்படுவதில்லை?

தமிழக முதலமைச்சர் பிரதமருக்குக் கடிதம் எழுதுவது, எதிர்க்கட்சிகள் கண்டன அறிக்கைகள் விடுவது, மத்தியில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சம்பிரதாய வார்த்தைகளை உதிர்ப்பது... இவையெல்லாம் தீர்வுகள் அல்ல. காலங்காலமாக இவற்றைப் பார்த்து ஏமாந்துபோன தமிழர்கள் நிரந்தரத் தீர்வையே வேண்டுகிறார்கள்.

அதேநேரம் தமிழக மீனவர்களால் பயன்படுத்தப்படும் இரட்டை மடி வலை, சுருக்கு வலை, இழுவை வலை போன்றவை மீன்வளத்தைப் பாதிக்கக்கூடியவை' என்கிற இலங்கைத் தமிழ் மீனவர்களின் ஆதங்கத்தில் உள்ள நியாயங்களையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதே போல் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசுகள் எடுக்க வேண்டும்.

மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டுவது சட்ட மீறலாக இருந்தாலும், அதற்குச் சட்டப்படி நடவடிக்கைகள்தான் எடுக்கப்பட வேண்டுமே தவிர, துப்பாக்கிச்சூட்டையோ அத்துமீறல்களையோ நடத்த இலங்கை ராணுவத்துக்கு எந்த உரிமையும் இல்லை. இதை அழுத்தம் திருத்தமாக இலங்கை அரசுக்குத் தெரிவித்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை.

இனி, முன்புபோல மீனவர்கள் மீது அத்துமீற முடியாது. எதிர்த்து நிற்க, போராட ஒட்டுமொத்தத் தமிழகமும் தமிழர்களும் இருக்கிறார்கள். நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டங்கள் என்பதும் நீளும், நிரந்தரங்களாகிவிடும் என்பதை ஆளும் அரசுகள் உணர வேண்டும்.

நன்றி:- ஜூனியர் விகடன்


## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூ.100), சில்லறையாகவும் (ரூ.110) பெற்றுக்கொள்ளலாம்.

(சி-7766)

சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்) - 021 222 2567

05

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

*அன்பு வாசகர்களுக்கு!*

*புருசோத்தமனால் எழுதப்படும் தமிழர் தலைவிதி எப்படியாகும் என்ற இக்கட்டுரை தொடர்பில் உங்களின் கருத்துக்களை இவ்விடத்தில் பதிவு செய்து கொள்ள முடியும். இக்கட்டுரையின் நோக்கமெல்லாம் யாரையும் குறை காண்பதோ அன்றி எவருக்கும் எதிரான கருத்துக்களை முன்வைப்பதோ அல்ல. மாறாக ஒரு பெரும் விடுதலைப் போராட்டத்தை நடத்திய தமிழினத்தின் இன்றைய அவலநிலைக்கு என்ன காரணம்.? எங்கள் தமிழ் அரசியல் தலைமை தமிழினத்திற்குத் துரோகம் செய்யும் அளவில் அவர்களுக்கு நடந்தது என்ன?*

*இப்படியே அழுது நொந்து எங்கள் காலத்தைப் போக்குவதும் தமிழ்- தமிழினம் பற்றி எங்கள் எதிர்கால சந்ததி எந்த நினைப்பும் விருப்பும் இல்லாமல் வாழ்வதும் தான் எங்கள் விதியாயிற்றா? எதிர்காலத்தில் எங்கள் இனத்தைப் பாதுகாக்க நாம் செய்யப்போவது என்ன? இதுபோன்ற விடயங்களை ஒரு பொறுப்பு வாய்ந்த ஊடகம் என்ற அடிப்படையில் வெளிப்படுத்துவது தார்மீகக் கடமை. இதை நீங்கள் யாரும் மறுதலிப்பீர்கள் என நாம் நம்பவில்லை.*


*அதேநேரம் வலம்புரி எப்போதும் நடுநிலையைப் பாதுகாக்கத் தவறியது இல்லை என்பதும் நீங்கள் அறிந்ததே. அந்த வகையில் இங்கு எழுதப்படும் கட்டுரை தொடர் பில் நீங்கள் முன்வைக்கும் கருத்துக்கள், மறுப்புக்கள் இவ்விடத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறோம்.*

*(ஆ-ர்)*

இரா.சம்பந்தர் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் அவரின் வசிப்பிடம் கொழும்பாகவே இருந்துள்ளது. வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்று நாம் பேசிக்கொண்டிருந்தாலும் இன்று திருகோணமலை எங்கள் கையை விட்டு வேகமாக நழுவிக் கொண்டிருக்கிறது. எனினும் அது பற்றியெல்லாம் சம்பந்தர் ஐயா கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் தமிழர்களின் அரசியல் தலைவராக இருக் கின்ற போதிலும் அவர் வடக்கிற்கோ கிழக்கிற்கோ செல்வது கார் காலத்துக் கதிரவன் போல தான். இதனால் கிழக்கில் தமிழ் மக்கள் படும் அவலத்தையோ அல்லது வடக்கில் தமிழ்மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையோ சம்பந்தரால் அறிய முடியாதிருப்பது உண்மை.

ஓர் இனத்தின் அரசியல் தலைவர் என்றால் நிச்சயமாக



அவர் அந்த இனத்தின் வாழ்விடத்தில் வசிப்பதே உத்தமமானது. அப்போதுதான் நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியும். இதை விடுத்து எப்பாவது இருந்துவிட்டு ஒருக்கால் பயணம் செய்வது என்றிருந்தால் தமிழ்மக்களின் வேதனைகளும் துன்பங்களும் கசப்பாகவும் வெறுப்பாகவும் 'இருக்குமே யன்றி எங்கள் இனத்திற்கு இப்படி நடக்கிறதே என்ற இரக்கம் ஒருபோதும் ஏற்படமாட்டாது. அதிலும் இரா.சம்பந்தர் இயல்பிலேயே கோப மூச்சுக் கொண்டவர். தன் கண்களை மூடி சுட்டு விரலை நீட்டி அதட்டிப்பேசி ஆட்களை அடித்து அமர்த்துவதில் சமர்த்தர்.

அதேநேரம் காமராஜரின் பாணியில் பார்க்கலாம், யோசிப்பம். இப்படியான வார்த்தைப் பிரயோகங்கள் மூலமாக எந்தப் பெரிய விடயத்தையும் அப்படியே கைவிடச் செய்வதில் அவருக்கு இணை அவர்தான்.

அதேவேளை அவரின் ஆங்கிலப் புலமையும் உடன் இருப்பவர்களை மௌனமாக்கி விடுகிறது.

சம்பந்தரின் அதட்டலைக் கட்டுப்படுத்தக்கூடிய திராணி தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியிடம் தான் இருந்தது. சங்கரி இருக்கின்ற சபையில் சம்பந்தர் அடக்கி வாசிப்பது வழக்கம். சம்பந்தர் உறுக்கிப் பேசினால் சங்கரி மேசையில் அடித்துப் பேசுவார். அதனால் இரண்டு பெரும் நாதஸ்வர வித்துவான்கள் சந்திக்கும்போது எங்ஙனம் இனம்புரியாத அமைதி நிலவுமோ அதுபோன்ற ஒரு கள நிலைமை சங்கரியும் சம்பந்தரும் இருக்கின்ற இடத்தில் நிலவும்.

இதனால்தான் ஆனந்தசங்கரியை எப்படியும் தூக்கி எறிய வேண்டும் என்று சம்பந்தர் திட்டம் தீட்டினார். அந்தத் திட்டத்திற்கு விடுதலைப்புலிகளும் உடன்பட்டதால் வெற்றி சம்பந்தருக்காயிற்று.

இதேநேரம் தன்மீதான வீண் பழிகளை விடுதலைப்புலிகளிடம் தெரியப்படுத்துவதில் சங்கரி தவறிவிட்டார் என்பதையும் கூறித்தானாகவேண்டும்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூட்டமைப்பைக் கூட்டத்திற்கு அழைத்தால்; அவர் எங்களுக்கு வகுப்பு எடுக்கவோ என்று சங்கரி கேட்பார்.

ஆனால் சம்பந்தருக்கு அது வகுப்புத்தான் என்பது நன்கு தெரிந்தாலும் இப்போது புலிகளை எதிர்ப்பது புத்திசாலித்தனமல்ல என்பதால் அதைப் புரிந்துகொண்டு தமிழ்ச்செல்வன் நடத்திய வகுப்புக்களில் சம்பந்தர் பங்கேற்றார். கூடவே உங்கள் வகுப்புக் களுக்கு வர சங்கரி மறுக் கிறார் என்றும் மெதுவாகச் சொல்லி வைத்தார்.

அதன் விளைவுதான் ஆனந்த சங்கரி அவர்களுக்கு அரசியலில் மிகுந்த பாதிப்பைக் கொடுத்தது.

இதற்குமேலாக சங்கரியின் கடிதம் எழுதும் பழக்கமும் அவரின் அரசியல் எதிர்காலத்திற்கு ஆரோக் கியமானதாக இருக்க வில்லை.

இங்கு ஆனந்தசங்கரி எழுதிய கடிதங்கள் 'என்பது புலிகளுக்கும்' அதன் தலைவர் பிரபாகரனுக்கும் எதிராக எழுதிய கடிதங்களாகவே இருக்கும் என்பதும் இங்கு நினைவுபடுத்தற்குரியது.

எது எவ்வாறாயினும் தலைவர் பிரபாகரனுக்கு ஆலோசனையாக கடிதம் எழுதிய ஒரே தமிழ் அரசியல் தலைவர் ஆனந்த சங்கரி என்பது மறுக்க முடியாத உண்மை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடாக கூட்டமைப்புக்குள் அங்கத்துவம் பெற்றவர்களில் பலரும் புலிகளை மனத்தாலும் இராஜதந்திரத்தாலும் எதிர்க்க ஆனந்த சங்கரி மட்டும் வெளிப்படையாக புலிகளை எதிர்த்தார், விமர்சித்தார்.

யதார்த்தவாதி வெகுசன விரோதி என்பதை ஆனந்த சங்கரி மறந்து போனதுதான் புலிகளிடம் இருந்து அவர் அந்நியப்படுவதற்கு மூல காரணமாயிற்று.

(திங்கள் வளரும்)

-புருசோத்தமன்-

# ஜெனிவா - 2015 தீர்மானம் அமுலாக்கப்படாத நிலையில்

# சர்வதேச பொறிமுறையே அவசியம்

## ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையத்திற்கு மக்கள் ஒன்றுதிரண்டு மகஜர் கையளிப்பு




(பரந்தன்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையில் கடந்த 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு அமுல்படுத்த விரும்பாத நிலையில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துமாறும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.


கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில் ஒன்று கூடிய பொதுமக்கள் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அத்தோடு கிளிநொச்சி 155 ஆம் கட்டைப்பகுதியில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்திற்குச் சென்று அங்கு தங்களின் 12 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் "அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பதில் சொல், பயங்கரவாதச் தடைச் சட்டத்தை உடனே நீக்கு,இலங்கையில் நிலைமாறு கால நீதிக்கான அமைச்சு ஒன்றை உருவாக்கு" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும், பனர்களையும் ஏந்தியிருந்தனர். (2-312-15)










(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு விதமாக பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்று கூடி ஐ.நா.மனித உரிமைகள் ஆணையகத்திடம் மகஜர் ஒன்றை கையளிக்கும் வகையில் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை அன்ரனி விக்டர் சோசையிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நில ஆக்கிரமிப்பினால் பாதிப்பிற்கு உள்ளானவர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகள், மீனவர்கள், என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு குறித்த மகஜரை கையளித்தனர்.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் 10.30 மணிய்ளவில் ஒன்றுகூடிய பல நூற்றுக்கணக்கான மக்கள் காணாமல் போன தமது உறவினர்களின் புகைப்படங்களை ஏந்தியவாறும்,சிலர் காணிகளையும் மக்களின் நிலங்களையும் சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் விடுவிக்கக் கோரி பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளாரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை வாசித்துக் காட்டிய பின் மகஜரை கையளித்தனர். கையளிக்கப்பட்ட மகஜரை ஐ.நா.மனித உரிமைகள் தொடரின் 34 ஆவது அமர்வு தற்போது இடம்பெற்று வருகின்ற நிலையில் உரிய தரப்பினரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது மகஜரை பெற்றுக் கொண்ட மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர்,ஆயர் சார்பாக நான் உங்களின் கோரிக்கை அடங்கிய மகஜரை பெற்றுக் கொண்டுள்ளேன். தற்போது இடம்பெற்று வருகின்ற ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சம்பந்தப்பட்டவர்களுக்கு குறித்த மகஜரை உடனடியாக அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

உங்களின் போராட்டம் நீதியானது. இங்குள்ளவர்களை காண்கின்ற போது மிகவும் வேதனையாக இருக்கின்றது.

எங்களுடைய உறவுகள், கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டும் உள்ளனர். எனவே பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என தெரிவித்தனர். (2-4-15)







(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்திருந்தனர்.

இக் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு மாங்குளம் - முல்லைத்தீவு வீதி ஊடாக நகர்ந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்களின் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடத்தை சென்றடைந்தது.

இதன்போது கடத்தப்பட்டு கையளிக்கப்பட்டு மற்றும் இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பெற்றோர், தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் முப்படையினராலும் கையகப்படுத்தியுள்ள காணி உரிமையாளர்கள் உள்ளிட்டோர் தமது நிலைப்பாடுகளை ஐ.நா. ஆணையகத்திற்கு தெரியப்படுத்தும் முகமாக இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இறுதியாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 10 பேர் அடங்கிய குழுவொன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐ.நா. அலுவலகம் ஒன்று அமைக்கப்படாத காரணத்தினால் கிளிநொச்சி மாவட்டத்திற்குச் சென்று 155 ஆம் கட்டையில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தில் தமக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.(2-281-15)




# 72 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா பெறுமதியில் 1,797 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள்

(மல்லாவி )

லண்டனில் உள்ள புலம் பெயர் தாயக உறவுகளினால், "ஓம் சரவணபகவா சேவா" அறக்கட்டளை நிதியத்தின் ஊடாகவும் யாழ். வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டிலும் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போர் நடவடிக்கை காரணமாகவும் மற்றும் ஏனைய காரணங்களாலும் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களுக்கும் மற்றும் மாற்றுத் திறனாளிகள் குடும்பங்களிற்கும் பெண் தலைமைத்துவக் குடுமபங்கள் ஆகியவற்றில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து 200 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய பல்வேறு உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது.

இந்த உதவித் திட்டங்கள் கடந்த முதலாம் திகதி புதன்கிழமை தொடக்கம் "ஓம் சற்குரு சரவணபகவா சுவாமிகள்" நேரில் சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்கி வருகின்றார்.



இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்கள், மாற்றாற்றல் கொண்டோர் குடும்பங்கள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் காணப்படும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் ஆகியோரில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 797 குடும்பங்க ளுக்கு தலா 4 ஆயிரம் ரூபா பெறுமதியான மொத்தம் 71 இலட்சத்து 88 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த உலர் உணவுப் பொதிகள், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 500 குடும்பங்கள், கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 500 குடும்பங்கள், கிளிநொச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கத்தின் அங்கத்துவக் குடும்பங்கள் 45, கிளிநொச்சி வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் பயனாளிகள் குடும்பங்கள் 192, யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கொக்குவில் பகுதியில் உள்ள 500 குடும்பங்கள், கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய 45 குடும்பங்களுமாக மொத்தம் ஆயிரத்து 797 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2-15)

# தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் பெண்கள் தன்னம்பிக்கையுடன் கௌரவமாக வாழ்ந்தார்கள்

## சாள்ஸ் எம்.பி. பெருமிதம்

(குருமன்காடு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் பெண்கள் தன்னம்பிக்கையுடன் கௌரவமாக எந்த நேரத்திலும் போர்ச்சூழலாக இருந்தாலும் ஒரு மன நிம்மதியாக வாழ்ந்த காலம் இருந்தது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற சர்வதேச பெண்கள் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

நாட்டில் பெண்களுக்கு இருக்கின்ற அச்சுறுத்தல் காரணமாக தனியாக ஒரு இடத்திற்குச் சென்று வர முடியாத சூழ்நிலை தற்போது இருக்கின்றது.

பெண்களுக்குரிய கௌரவம் இல்லை. அவர்களுக்கு தனிமனித சுதந்திரம் இல்லை. தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் அதனை அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் தன்னம்பிக்கையுடன், பெண்கள் ஒரு கௌரவமாக, எந்தநேரத்திலும் போர்ச்சூழலாக இருந்தாலும் மன நிம்மதியாக வாழ்ந்த காலம் இருந்தது.

அன்று எங்களுடைய பெண்களுக்கு இருந்த கௌரவம், தன்னம்பிக்கை, பெண் சுதந்திரம் இன்று இல்லை. 2009 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு எங்களுடைய கலாசாரத்தை எடுத்துப் பாருங்கள்.

அந்தக்காலத்தில் ஏதாவது ஒது பத்திரிக்கையில் எங்களுடைய பிரதேசத்தில் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான செய்திகள் வருவது மிகவும் அரிதானது. ஆனால் தற்போது அது வாரத்திற்கு ஒரு முறை பத்திரிகையில் வருகின்ற ஒரு செய்தியாக நாங்கள் பார்க்கின்றோம்.

எங்களுடைய சமுதாயம் எந்தளவிற்கு கலாசார ரீதியில் பின்னோக்கிப் போகின்றது என்பதை அந்த செய்திகள் மூலம் நாங்கள் அறிந்து கொள்ளமுடியும்.

இந்த சூழலில் கணவன்மாரை இழந்த பெண்கள் தங்களுடைய பிள்ளைகளையும் கொண்டு அவர்கள் எப்படி கௌரவமாக பெண் சுதந்திரத்துடன் வாழ முடியும்




என கேள்வி எழுப்பினார்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் இந்த இரண்டு குடும்பங்களுக்கும் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தினால் ஒரு சுயமாக தங்களுடைய சுயமுயற்சியில் தங்களுடைய குடும்பத்தை நடத்தக்கூடிய அளவிற்கு அவர்களுக்குரிய வாழ்வாதார பொருளாதார உதவிகளை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-250)




# இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்



(மல்லாவி )

செட்டிகுளம் பிரதேச பிரிவிற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணம் வழங்கி வைக்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை காலை செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உபகரணங்களை முன்னாள் வவுனியா மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும் செட்டிகுளம் பிரதேச சம்மேளன தலைவருமாகிய சங்கரன் சசிகுமார் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வின் போது, செட்டிகுளம் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர், இளைஞர் சேவை அதிகாரி மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இளைஞர் கழகத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

# வீட்டுத்திட்டம் இதுவரை வழங்கப்படவில்லை மழை,வெயில் காலங்களில் அவதியுறுகின்றோம்

## சிவபுரம் கிராம மக்கள் ஆதங்கம்

மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவபுரம் கிராம மக்கள் தாம் மீள்குடியேற்றப்பட்டு இரண்டு வருடங்களை கடந்த நிலையில் கிராமத்தில் 42 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் 6 குடும்பங்களுக்கு மட்டுமே இதுவரை வீட்டுத்திட்டங்கள் கிடைத்துள்ளதாகவும் 2 வருடங்களாக வரட்சி, மழை ஆகியவற்றினால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு 2கிலோமீற்றர் நீளம் கொண்ட கிராமத்தின் சிறிய வீதிகள் செப்பனிடப்படாமலும் காணப்படுகின்றது.

இதனால் தாம் பல அசௌகரியங்களை மழை காலங்களில் எதிர்நோக்குவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு முன்பள்ளி கட்டட வேலைகள் இழுபறி நிலை காணப்படுவதாக பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் முன்பள்ளி சிறார்கள் தூர இடங்களிற்கு சென்று கல்வி பயில வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.



இங்குவாழும் 42 குடும்பங்களில் 8 குடும்பங்களுக்கு மட்டுமே வாழ்வாதார உதவிகள் கிடைத்துள்ளதாகவும் இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (2-23)

# க.பொ.த. (உ/த) 2019 விண்ணப்பப்படிவ அனுமதி

(கிளிநொச்சி)

கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் 2019 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பிரிவில் கற்பதற்கான விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அலுவலகத்தில் பாடசாலை நேரத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பெற்றுக்கொள்ள முடியும் என அதிபர் அறிவித்துள்ளார். (2)

25 ஆவது நாள்

# எதிர்வரும் நாட்களில் எமது போராட்டத்தின் வடிவம் மாறும்

## கிளிநொச்சி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்களின் சங்கத் தலைவி எச்சரிக்கை

கிளிநொச்சி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் 25 ஆவது நாளாக தீர்வின்றி தொடர்கிறது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று வியாழக்கிழமை 25 ஆவது நாளாக தீர்வின்றி தொடர்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த மாதம் 20 ஆம் திகதி அன்று காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு பலரது ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தங்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை இவ்வாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட போவதாகவும், சில வேளைகளில் தங்களின் போராட்டத்தின் வடிவத்தினை மாற்றி எதிர்வரும் நாட்களில் போராட வேண்டி வரும எனவும் கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி கலாரஞ்சனி தெரிவித்துள்ளார். (2-15-312)



# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2017-13.04.2017

## அரசியலில் நல்ல பதவிகள் தேடி வரும்!



நிரந்தரமாக புகழ் குவிக்க விரும்பும் சிம்ம இராசி அன்பர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, சூரியன் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு பலமிழந்த தனலாபாதிபதியான புதன், உச்சம் பெற்ற தொழில் ஸ்தானாதிபதியான சுக்ரன் ஆகியோரும் இணைந்திருக்கின்றனர். இந்த மூன்று கிரகங்களையும் அவர்கள் வீற்றிருக்கும் ஸ்தானத்திற்கு அதிபதியான குரு பகவான் பார்க்கிறார்.

"குரு பார்க்கக் கோடி நன்மை" என்பதற்கு ஏற்ப, கடைசி நேரத்தில் எப்படியாவது காரியங்கள் கைகூடிவிடும். ஆனால் அது நிறைவேறுவதற்குள் மனப் போராட்டங்கள் அதிகரிக்கும். பணப் பிரச்சினைகளும் தலை தூக்கும். செல்வாக்கைப் பயன்படுத்தி நீங்கள் ஜெயித்துக் காட்டினாலும் கூட உள்ளத்தில் அமைதி குறைவாகவே இருக்கும்.

ஜென்மத்தில் ராகுவும், 7இல் கேதுவும் இருப்பதால் சர்ப்பதோஷத்தின் பிடியில் சிக்கியவர்களாக விளங்குவீர்கள். எனவே குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கலாம். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்கள் ஏற்படலாம். வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். கட்டிய வீட்டை விற்பது, வாகனத்தை மாற்றுவது போன்றவை நடைபெறும் நேரம் இது. பொறுமையைக் கடைப்பிடித்தால் பெருமை காணலாம். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம்.

"இப்படி சரியில்லாத பலன்களாகவே பங்குனி மாதம் கடந்துவிடுமா?" என்று சங்கடப்பட வேண்டாம். தளர்ச்சி மாறி வளர்ச்சி கூட பரிகாரம் செய்து கொள்ளலாம். ராகு-கேது பிரீதியாக சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்யலாம். அர்த்தாஷ்டம சனிக்குப் பரிகாரமாக சனிக்கிழமைதோறும் சனி பகவானை வழிபட்டு வாருங்கள். சனி விலகுவதற்கு இன்னும் சில மாதங்கள் உள்ளது என்பதால், திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, பெரிச்சிக்கோவில், நல்லிப்பட்டி போன்ற ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டும் வரலாம். பங்குனி உத்தரம் அன்று முருகப் பெருமானை வழிபடுவது நல்லது.

பொன்னான புதன் பெயர்ச்சி

மார்ச் 30 ஆம் திகதி மேஷ இராசிக்குப் புதன் வருகிறார். மீண்டும் ஏப்ரல் 7ஆம் திகதி வக்ர இயக்கத்தில் மீண்டும் மீனத்திற்கே புதன் செல்கிறார். இதுவரை வலிமையிழந்திருந்த தனலாபாதிபதியான புதன் பலம் பெறுகிறார். எனவே மாதத் தொடக்கத்தில் நடைபெறாத சில காரியங்கள் மடமடவென நடைபெறத் தொடங்கும். உங்களின் திறமை பளிச்சிடும் நேரம் இது. விருது பெறும் சூழ்நிலை கூட ஒரு சிலருக்கு உண்டாகும். சிலருக்கு பூர்வீக இடம் கைக்கு கிடைத்து, அதில் புதிதாக மனை கட்டிக் குடியேறும் வாய்ப்பு கிடைக்கப் போகிறது.

சனியின் வக்ர காலம்

இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாகும். அர்த்தாஷ்டமச் சனியாக இருந்து ஆரோக்கியத்தில் தொல்லை கொடுத்து, அருகில் இருப்பவர்களிடமும் பகையை உருவாக்கி வந்த சனிபகவான், வக்ரத்தில் இருக்கும் பொழுது நன்மைகளையே செய்வார்.




அந்த நிகழ்வு ஏப்ரல் 9ஆம் திகதி நிகழவிருக்கிறது. இதன் விளைவாக உடல்நலம் சீராகும். உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். கடன் சுமையின் பாதிப்பில் இருந்து விடுபடுவீர்கள். கருத்து வேறுபாடுகள் அகலும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

ரிஷபச் செவ்வாயின் சஞ்சாரம்

தொழில் ஸ்தானம் எனப்படும் இடத்திற்கு, ஏப்ரல் 11ஆம் திகதி உங்களுக்கு யோகம் செய்யும் செவ்வாய் வந்து அமரப் போகிறார்.

தொழிலில் இரட்டிப்பு

இலாபம் கிடைக்கும். வாகன யோகத்தோடு வளர்ச்சி காண்பீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து நண்பர்களுடன் கூட்டாகத் தொழில் செய்யத் திருப்புமுனை உருவாகும். புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். பத்திரப்பதிவில் இருந்த தடைகள் அகலும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு நல்ல பதவிகள் தேடி வரலாம்.

இம்மாதம் ஞாயிறுதோறும் விரதமிருந்து சூரிய பகவானை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்காள சிறப்பு பலன்கள்

ஜென்ம ராகுவும், சப்தம கேதுவும் ஆதிக்கம் செலுத்துவதால், குடும்பத்தில் மனஸ்தாபங்கள் ஏற்படாமல் இருக்கப் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே உங்கள் எண்ணங்கள் பூர்த்தியாகும். வருமானம் ஒரு மடங்காக இருந்தால் செலவு இரு மடங்காக உயரும். எனவே பற்றாக்குறை அதிகரிக்கும். குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

கணவன்- மனைவிக்குள் அந்நியோன்யம் குறையலாம். பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

தாய்வழி ஆதரவு தக்க விதத்தில் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். காரிய வெற்றிக்கு சூரிய வழிபாடு தேவை.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## தடை அகலும்; தனவரவு திருப்திகரமாக இருக்கும்!



வெற்றிக்காக திட்டமிட்டு செயலாற்றும் கன்னி இராசி அன்பர்களே!

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன், தனாதிபதி சுக்ரனோடும், விரயாதிபதி சூரியனோடும் இணைந்து சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இராசிநாதனான புதனும், சப்தமாதிபதியான குருவும் பரிவர்த்தனை யோகம் பெற்று விளங்குகிறார்கள். புத-சுக்ர யோகம், புத-ஆதித்ய யோகம், குரு-சந்திர யோகம், பரிவர்த்தனை யோகம் போன்ற இத்தனை விதமான யோகத்தோடு இந்த மாதம் பிறப்பதால், உங்களின் தடைகளை அகற்றும் மாதமாக இது அமையும். தன வரவும் திருப்திகரமாக இருக்கும்.

குரு பார்வை இருப்பதால் கல்யாணக் கனவுகள் நனவாகும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். நெளிவு, சுளிவுகளைக் கற்றுக்கொண்டு நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். வாக்கு ஸ்தானாதிபதி உச்சம் என்பதால், சொல்லும் சொற்கள் அனைத்தும் வெல்லும் சொற்களாக மாறும்.

துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். நல்ல பல காரியங்கள் இல்லத்தில் நடை பெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

இத்தனை விதமான யோக அமைப்புகள் இருந்தாலும், 8ஆம் இடமான மேஷ இராசியில் செவ்வாய் பலம் பெற்றிருக்கிறார். எனவே உடல் நலக் குறைபாடுகள் உள்ளத்தை வாட்டும். வெளிநாடு சென்றவர்கள், தாய் நாடு திரும்பக் கூடும். குடைபிடித்து வெயிலின் தாகத்தைத் தவிர்ப்பது போல, பரிகாரங்கள் செய்து ஓரளவேனும் துன்பங்களில் இருந்து விடுபடலாம்.

செவ்வாய்க்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று யோகபலம் பெற்ற நாளில் வழிபாடு செய்வது நல்லது. செவ்வாய்க்கிழமை விரதமிருந்து துர்க்காதேவிக்கு, செவ்வரளி அல்லது செம்பருத்தி மாலை சூட்டி, விளக்கேற்றி வழிபடலாம். இம்மாதம் வரும் உத்தரம் நட்சத்திரத்தில் முருகனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யலாம். இந்த நாளில் ராஜ அலங்கார முருகனை தரிசிப்பது நன்மை பயக்கும். இப்படிச் செய்யும் பரிகாரங்களால் செயற்பாடுகளில் உள்ள தளர்ச்சி அகன்று வளர்ச்சி கூடும். மனக்குழப்பம் மிக்கவர்களுக்கு நல்ல மாற்றங்கள் ஏற்படும். மொத்தத்தில் வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய மாதம் இது.

பொன்னான புதன் பெயர்ச்சி

புதன் உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 10ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர். அவர் மார்ச் 30ஆம் திகதி மேஷ இராசிக்குச் செல்கிறார். ஏப்ரல் 7ஆம் திகதி மீன இராசிக்கு மீண்டும் வருகிறார். இதுபோன்ற காலங்களில் பணத்தேவைகள் அதிகரிக்கும். மறைந்த புதனால் நிறைந்த தன இலாபமும் கிடைக்கும். அவற்றைக் கொண்டு கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமன்றி ஆடம்பரப் பொருட்களையும் வாங்க நேரிடும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகளை நடத்தி மகிழ்வீர்கள்.




சனியின் வக்ர இயக்கம்

ஏப்ரல் 9ஆம் திகதி விருச்சிக இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 5,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் வக்ரம் பெறும்பொழுது, நன்மையும் தீமையும் கலந்தே வரும். பிறரை நம்பிச் செயற்பட முடியாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையிலேயே வைத்துக் கொள்ளுங்கள். தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றவில்லையே என்று பிள்ளைகள் உங்கள் மீது கோபப்படுவார்கள். உத்தியோக முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

செவ்வாய் பெயர்ச்சிக் காலம்

ஏப்ரல் 11ஆம் திகதி ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இதுபோன்ற நேரங்களில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொலைதூரப் பயணங்களால் நன்மை உண்டு. சுற்றத்தார், சொந்த பந்தங்கள் விரும்பி வந்திணைவர். விரக்தி நிலை மாறியதை எண்ணி மகிழ்வீர்கள். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பூர்வீகச் சொத்துகளில் முறையான பங்கீடு கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அவர்களுடைய விருப்பம் நிறைவேறும்.

இம்மாதம் புதன்கிழமை தோறும் விஷ்ணு வழிபாட்டையும் வியாழன் தோறும் குருபகவான் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது. சண்முக கவசப் பாராயணம் செய்து வடிவேலனை வழிபடுவதன் மூலம் நன்மைகள் அடுக்கடுக்காக வந்துசேரும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

பரிவர்த்தனை யோகத்தோடு தொடங்கும் இந்த மாதத்தில் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். மனதளவில் செய்ய நினைத்த காரியத்தை மடமடவென்று செய்து முடிப்பீர்கள். இனத்தார் பகை மாறும். இனிய செய்திகள் இல்லம் வந்துசேரும். பெற்றோர் வழிப் பிரச்சினைகள் அகலும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடந்துகொள்வர். கணவன் - மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். கடல் தாண்டிச் செல்லும் யோகம் உண்டு. இல்லத்தில் சுப நிகழ்ச்சி நடைபெறக்கூடும். ஒரு சிலருக்கு புதிய வீடு வாங்கும் யோகம் ஏற்படலாம்.


உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்லுங்கள். தாய் வழி ஆதரவு கூடும். செவ்வாய் விரதமும், முருகப் பெருமான் வழிபாடும் செல்வச் செழிப்பை வழங்கும்.

(தொடரும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# PET வகை பிளாஸ்ரிக்குகளின் மீள் பாவனை சரியானதா?

# மெல்ல உயிர்கொல்லும் பிளாஸ்ரிக்குகள் பற்றியதோர் அலசல்





(03.03.2017 அன்றைய தொடர்ச்சி)

இப் PET பல்பகுதியங்கள் நிறமற்ற (Colourless)Ö பகுதிப்படிக (Semicrystalline), பாரம்குறைந்த (Less weight) ரெசின்களாகும்.

இப்பிளாஸ்ரிக்குள் தன்னகத்தே முன் துவாரங்களை (Pores) கொண்டிருப்பதால் பாவனைக்குப் பின் இவற்றை தூய்மைப்படுத்துவது (Cleaning) மிகக் கடினம்.


இது தவிர இவ்வகையான கொள்கலன்களில் நமது வாயை வைத்துக் குடிக்கும் போது பற்றீரியாக்களின் தாக்கம் அதிகமாகும் வாய்ப்புக்களும் உள்ளது.

இப்பற்றீரியாக்கள் இந்த PET பிளாஸ்ரிக்குகளில் காணப்படும் துவாரங்களில் இலகுவாக வளர்ச்சி அடைகின்றன.



எனவே இவ்வகையான பிளாஸ்ரிக் கொள்கலன்களை நீண்ட காலத்திற்கு மீள் பாவனைக்கு உட்படுத்தும் போது உடல் நலக் குறைவு ஏற்படவும் வாய்ப்புக்கள் அதிகம்.

இது தவிர, ஓரளவு நீடித்த பாவனைத் தன்மை கொண்ட PET வகையான பிளாஸ்ரிக்குகள் வெப்பம் மற்றும் சூரிய ஒளியினால் அதன் நீடித்த பாவனையின் போது சுய பிரிகையடையும்.




Polycondensation reaction in the production of PET

இதன்போது நச்சுத்தன்மை கொண்ட இரசாயனங்கள் கொள்கலனில் அடைக்கப்பட்ட உணவு அல்லது மென்பானங்கள் மற்றும் நீருடன் கலக்கும் வாய்ப்புகளும் அதிகம்.

இதன்போது இப் பிளாஸ்ரிக் போத்தல்கள் நிறமாற்றமடைவதோடு அதில் உள்ள இரசாயனப் பிணைப்புக்கள் உடைவதனால் இறுதியில் அசற்றல்டிகைட்டு (Acetaldehyde) எனும் இரசாயனப் பதார்த்தம் உருவாகுவதோடு, பல சிக்கற் பல்பகுதியங்களும் (cross- linked polymer) உருவாகின்றன.

இவை உடல் ஆபத்தை விளைவிக்கும் இரசாயனங்களாகும்.

இவ்வாறான இரசாயனப் பதார்த்தங்களின் உருவாக்கம் PET வகைக்கொள்கலன்களில் அடைக்கப்பட்ட நீரில் ஒருவித சுவையை (off-taste) ஏற்படுத்துவதை பெரும்பாலானவர்கள் உணர்ந்திருக்க வாய்ப்புக்கள் அதிகம்.

எனவே குடிநீர் மற்றும் மென்பானப் போத்தல்களின் மீள்பாவனையை தவிர்ப்பது மிகவும் நல்லது.

இது தவிர கொள்கலன்களில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் அவற்றில் அடைக்கப்பட்ட நீர், பானவகை மற்றும் உணவைச் சென்றடையக்கூடிய சாத்தியங்கள் உடைய பிளாஸ்ரிக்குகளின் அடையாளக் குறியீடுகளாக 3,6 மற்றும் 7 ஆகியவை காணப்படுகின்றன.

ஏனெனில் இவ்வகையான பிளாஸ்ரிக்குகள் உடலிற்கு பாதகமான விளைவை ஏற்படுத்தும் Bisphenol A எனும் இரசாயனப் பதார்த்தத்தைக் கொண்டிருப்பது அண்மைக்கால ஆய்வொன்றில் உறுதியாகியுள்ளது.

இவ்விரசாயனப் பதார்த்தமானது உடலில் காணப்படும் ஈஸ்ரஜன் (Estrogen) எனும் ஓமோனை (Hormone) ஒத்த இயல்பை உடையதும் உடலிற்கு மிகவும் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் தன்மையுடையதுமாகும்.

இவ்விரசாயனப் பதார்த்தமானது அகங்சுரக்கும் தொகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.

(Endocrine distruptor) வகையிலடங்கும் ஆபத்தானதொரு இரசாயனமாகும்.

எனவே உடல்நலத்திற்குப் பாதிப்பை விளைவிக்கும் இப்பிளாஸ்ரிக்கு மீள்பாவனையைத் தவிர்ப்பது அவசியமானதொன்றாகும்.

இருப்பினும் தன் அடையாளக் குறியீடுகளாக 2, 4 மற்றும் 5 ஐக் கொண்ட பிளாஸ்ரிக்கு வகைகள் நீண்ட நாட்களிற்குத் தாக்குப்பிடிக்கும் தன்மையைக் கொண்டவையென (Durable) ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.


எனவே இவ்வகையான பிளாஸ்ரிக்குகளின் மீள் பாவனையானது பாதுகாப்பானதெனினும் இவ்வகைப் பிளாஸ்ரிக்குக் கொள்கலன்களில் சிறு வெடிப்புக்களோ, கீறல்களோ ஏற்படும் பட்சத்தில் அவற்றின் மீள்பாவனையில் மிகவும் கவனம் தேவையென்பது இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

இதுதவிர அதிகூடிய வெப்பம், சூரியஒளி என்பவை இவ்வகைப் பிளாஸ்ரிக்கின் சுயதாக்கம் மற்றும் பிரிகைக்கு வழிவகுக்கும் என்பதும் இங்கே கோடிட்டுக்காட்ட வேண்டிய ஒரு விடயமாகிறது.

பாதுகாப்பான உணவு மற்றும் நீர்கொள்கலன்கள் செய்யப்படும் பிளாஸ்ரிக்குகள் 1,2,4 மற்றும் 5 எனும் அடையாளக் குறியீடுகளைக் கொண்டுள்ள போதும் அவற்றின் மீள்பாவனை என்பது சற்றே சிந்திக்கப்பட வேண்டியதொன்று.

காலத்திற்கும் தேவைக்கு மேற்ப மாறிவரும் இந்த விஞ்ஞான உலகு விந்தைகள் பல புரியினும் எம்மையும் எமது சூழலையும் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வைக் கொண்டிருப்பது எம் ஒவ்வொருவரதும் கடமையே.

எனவே மெல்ல உயிர் கொல்லும் இப்பிளாஸ்ரிக்குகளின் மீள்பாவனையை (Re-use) தவிர்த்து பாவித்த பிளாஸ்ரிக்குகளைத் தகுந்த முறையில் (Proper disposal) அகற்றி எம் வருங்கால சந்ததிக்கு வளமான சூழலை விட்டுச் செல்ல முயல்வோமாக.




பொலி எதிலீன்ரெலேதலேற்று (Polyethylene terephthalate, PET)

(முற்றும்)

கலாநிதி (செல்வி) ஷிவதர்சினி
இராசலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 182

உயர் உறுதி கொண்ட வெண்ணிற ஈர் ஒட்சைட்டை ஆக்குகின்ற நிறப்பூச்சு (Paint) வகைகளில் காணப்படும் முதல் வரிசைத் தாண்டல் மூலகம் எது?

**புதிர் 182 இற்கான விடைகளை 27.03.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 181 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

யாழினி முரளி
கோயிற்கடவை,
துன்னாலை
கரவெட்டி

**புதிர் 181க்கான கேள்வியும் விடையும்:**

2022 ஆம் ஆண்டின் உலகக் காற்பந்தாட் டப் போட்டி (FIFA) நிகழ்ச்சிக்கு உபசரணை வழங்கும் நாடாக தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய கிழக்கு நாடு எது?

கட்டார் (Quatar)

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 182**

சரியான விடை:-.....................................................

முழுப்பெயர்:-.....................................................

முகவரி:-.....................................................

தொ.பே. இல:.....................................................

கையொப்பம்:.....................................................


# சசிகலா விவகாரம் 20ஆம் திகதிக்குள் இறுதி முடிவு வரும்



அ.தி.மு.க பொதுச்செயலாளராக சசிகலா நியமிக்கப்பட்டது தொடர்பாக எதிர்வரும் 20ஆம் திகதிக்குள் இறுதி முடிவு அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

சசிகலாவின் நியமனம் செல்லாது என்று அறிவிக்கக் கோரி தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தரப்பில், தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாட்டு மனு கையளிக்கப்பட்டிருந்தது.

இதற்கு சசிகலா தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து, தேர்தல் ஆணையத்தின் அறிவித்தலுக்கு அமைய ஓ.பி.எஸ் தரப்பிலும் விளக்கமளிக்கப்பட்டது. இந்நிலையில், சசிகலாவின் நியமனம் தொடர்பாக எதிர்வரும் 20ஆம் திகதிக்குள் முடிவு அறிவிக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-12)




# சிரியாவில் நேற்று அடுத்தடுத்து தற்கொலைப்படைத் தாக்குதல்

## 30 பேர் உயிரிழப்பு! இரத்த வெள்ளத்தில் சடலங்கள்





சிரியா தலைநகர் டமாஸ்கசில் நேற்று முன்தினம் தற்கொலை ப்படை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் 6 ஆண்டுகளைக் கடந்து 7 ஆவது ஆண்டாக நீடித்து வருகிறது. இந்த சண்டையில் 4 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். பல இலட்சம் மக்கள் உயிருக்குப் பயந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

சமாதான முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், அரசு கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும், தலைநகர் டமாஸ்கசிலும் தீவிரவாதிகள் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், டமாஸ்கசில் உள்ள பிரதான நீதிமன்ற கட்டடம் மற்றும் ஒரு உணவகத்தில் நேற்று முன்தினம் காலை தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், அப்பகுதியில் இருந்தவர்கள் தூக்கி வீசப்பட்டு ரத்தவெள்ளத்தில் துடிதுடித்தனர். தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணி யில் ஈடுபட்டனர். ஏராளமான பொலிஸாரும் குவிக்கப்பட்டனர்.

இந்த தாக்குதல்களில் சுமார் 30 பேர் கொல்லப்பட்டதாகவும், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட ஏராளமானோர் காயமடைந்ததாகவும் அரசு செய்தி நிறுவனமான சனா தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் உடனடியாக பொறுபேற்கவில்லை. எனினும், கடந்த சில வாரங்களாக தாக்குதல் நடத்திய அல்கொய்தா ஆதரவு தீவிரவாத அமைப்பே இந்த தாக்குதலையும் நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (இ-12)

# டி.டி.வி.தினகரன் போட்டியிடுவதால் எனது வெற்றி உறுதியாகிவிட்டது

## ஜெ.தீபா நம்பிக்கை



(சென்னை)

ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட உள்ள ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ.தீபா தேர்தல் வியூகம் குறித்து தனது பேரவை நிர்வாகிகளிடம் சென்னை, தியாகராயநகர், சிவஞானம் சாலையில் உள்ள தனது வீட்டில் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார்.

இதில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் தேர்தல் பணிகள் குறித்த பொறுப்புகள் நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டது.

பின்னர் ஜெ.தீபாவிடம், நிருபர் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு,

கேள்வி:- அ.தி.மு.க. வேட்பாளராக டி.டி.வி.தினகரன் அறிவிக்கப்பட்டு இருப்பது குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்:- கருத்து தெரிவிக்கும் அளவிற்கு அவர் முக்கியமான நபர் இல்லை. இந்த தேர்தலில் பொதுமக்களால் அவர் நிச்சயம் புறக்கணிக்கப்படுவார். அ.தி.மு.க.வில் மூத்த நிர்வாகிகள் பலர் இருந்தும் அவர்களுக்கு வாய்ப்பு தராமல், சசிகலா குடும்பத்தினரையே போட்டியிட வைத்திருப்பதால் தேர்தல் முடிவு எதிர்மறையான விளைவைத்தான் தரும். அவர் போட்டியிடுவதால் எனது வெற்றி உறுதியாகி விட்டது.

கேள்வி:- பேரவை சார்பில் போட்டியிடும் நீங்கள் சுயேச்சையாக தானே கருதப்படுவீர்கள்? எனவே பேரவையை அரசியல் கட்சியாக மாற்றும் எண்ணம் உள்ளதா?

பதில்:- சுயேச்சையாக தான் கருதப்படுவேன். தற்போது பேரவையை அரசியல் கட்சியாக மாற்றும் திட்டம் இல்லை. பொதுத்தேர்தல் வரும்போது ஆலோசித்து உரிய முடிவை அறிவிப்பேன்.

கேள்வி:- ஓ.பன்னீர் செல்வம் இரட்டை இலை சின்னத்தை பெறுவதற்காக டில்லியில் தேர்தல் ஆணையரை சந்தித்துள்ளாரே?

பதில்:- இதற்கு முன்பே இந்த நடவடிக்கையை எடுக்காமல், இடைத்தேர்தல் நடக்க இருக்கும் இந்த குறுகிய காலத்தில் இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது சாத்தியமாக இருக்காது என்று பலரும் கூறுகின்றனர்.

கேள்வி:- பேரவை உறுப்பினர்களுக்கான படிவம் எவ்வளவு வழங்கப்பட்டு உள்ளது? மேலும் எவ்வளவு விநியோகிக்க திட்டம் உள்ளது?

பதில்:- கடந்த 4 நாட்களில் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இலக்கு என்று இல்லாமல் உறுப்பினராக சேர விரும்பும் அனைவருக்கும் விண்ணப்பம் வழங்கப்பட்டு, பேரவையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# தென்கொரிய ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவிப்பு

ஊழல் மோசடியில் சிக்கிய தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியூன் ஹை பதவி நீக்கம் செய்யப்படவேண்டும் என அந்நாட்டின் அரசியல் சாசன நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி பதவி விலகிய 2 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற தென்கொரிய சட்டத்தின்படி, இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது.

தன்னுடைய தனிப்பட்ட ஆதாயத்திற்காக நாட்டின் விவகாரங்களில் தன்னுடைய தோழி சோய் சூன் சில்லை தலையிட அனுமதித்தமையால், பார்க் கியூன் ஹை அரசியல் சாசன நீதிமன்றத்தினால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்தத் தீர்ப்பின்படி பார்க் கியூன் ஹை மிக விரைவில் குற்றவியல் விசாரணை நடைமுறைகளை சந்திக்கவுள்ளார்.




தென்கொரியாவின் முதலாவது பெண் ஜனாதிபதியாக ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பார்க் கியூன் ஹை, அந்நாட்டில் அதிகாரத்தில் இருந்து நீக்கப்படும் முதலாவது ஜனாதிபதி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

## பஞ்சாப் முதல்வரானார் அமரீந்தர் சிங்



பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சராக அமரீந்தர் சிங் பதவியேற்றார்.

அவருடன் நவ்ஜோத் சிங் சித்து உள்ளிட்டோர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தலில், உத்தரபிரதேசம், உத்தரகாண்ட், கோவா மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

அதேசமயம், பஞ்சாப் மாநிலத்தில் அகாலி தளம்-பா.ஜ.க. கூட்டணி, காங்கிரசிடம் ஆட்சியை இழந்துள்ளது. மொத்தமுள்ள 117 தொகுதிகளில் 77 தொகுதிகளை வென்றுள்ள காங்கிரஸ் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றி யது. அக்கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக தேர்தலுக்கு முன்பாகவே அறிவிக்கப்பட்ட கப்டன் அமரீந்தர் சிங், முறைப்படி சட்டசபை காங்கிரஸ் தலைவராக அக்கட்சி எம்.எல்.ஏக்களால் தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், பஞ்சாப் தலைநகர் சண்டிகரில் நேற்று நடைபெற்ற விழாவில் அமரீந்தர் சிங் இரண்டாம் முறையாக பஞ்சாப் முதலமைச்சராக பதவியேற்றார். (இ-12)

# சிரிய உள்நாட்டுப் போரில் 4 இலட்சம் பேர் உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் கடந்த 6 வருடங்களாக இடம்பெற்றுவரும் தீவிர உள்நாட்டு போரில், இதுவரை 4 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும, சுமார் 5 மில்லியன் பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா.வின் குழந்தைகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், 13 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் அவசர உதவியை நாடியுள்ளதாகவும் குறைந்தது 8 இலட்சம் பேர் ஐரோப்பாவுக்கு அகதிகளாக விண்ணப்பித்துள்ளதாகவும் மேற்குறித்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகளில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என தெரிவித்துள்ள குறித்த அமைப்பு, கடந்த ஆண்டு குழந்தைகளுக்கு மோசமான ஆண்டு எனவும் இந்த ஆண்டில் மட்டும் குறைந்தது 650 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அதேபோல், கடந்த ஆண்டு 300இற்கு மேற்பட்ட வைத்தியர்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சுமார் ஒரு மில்லியன் பொதுமக்கள், எவ்வித உதவியுமின்றி கிளர்ச்சியாளர்களின் முற்றுகையிடப்பட்ட பகுதிக்குள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

சிரிய உள்நாட்டு போருக்கு முன்னதாக, சிரியாவின் சனத்தொகை 22 மில்லியன் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

கடந்த 6 வருடங்களுக்கு முன்பு, சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, கிளர்ச்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட சண்டை, பின்னர் உள்நாட்டு போராக உருவெடுத்தது.

இதனையடுத்து வலுப்பெற்ற கிளர்ச்சிக்குழு, இன்று பெரும்பாலான நாடுகளை ஆட்டிப்படைக்கும் ஐ.எஸ். ஐ.எஸ்.என்ற அமைப்பை உருவாக்கி சிரியாவின் கணிசமான பகுதிகளை கைப்பற்றி தனி நாடு அமைத்து ஆட்சி நடத்தியது.



அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்த குறித்த அமைப்பின் பிடியில் சிக்கியுள்ள நகரங்களையும் பொதுமக்களையும் மீட்பதற்கு அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் இராணுவ உதவியுடன் சிரிய இராணுவம் போர் தொடுத்து வருகின்றது. (இ-12)

## ஓய்வூதிய திட்ட சீர்திருத்தங்களுக்கு எதிராக பிரேசிலில் ஆர்ப்பாட்டம்

(பிரேசிலியா)

பிரேசிலில் ஓய்வூதியத் திட்டங்களில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் முதல் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களில் பத்தாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றுள்ளனர்.

பிரேசில் தலைநகர் பிரேசிலியாவில் நிதி அமைச்சகத்தை முற்றுகையிட்டு ஒரு சாராரும் சாவோ பாவ்லோவில் மற்றுமொரு சாராரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி ஆர்ப்பாட்டங்களால் நகர போக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஓய்வூதிய நலன்களுக்கு உச்ச வரம்புகளை நிர்ணயித்தல் மற்றும் ஓய்வுபெறும் வயதை அதிகரித்தல் போன்றவற்றால் நூற்றாண்டுக்கும் மேலாக மோசமான நிதி நிலைகளை சந்திக்கும் பிரேசிலின் பொருளாதார சரிவுகளை சீர்படுத்த முடியும் என்று ஜனாதிபதி மைக்கேல் ரேமர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதற்கேற்ப ஓய்வுபெறுவதற்கான ஆகக்குறைந்த வயதாக 65 வயதை நிர்ணயிக்க வேண்டும் என்று பிரேசில் அரசு தீர்மானித்துள்ளது.

அரசின் இந்த தீர்மானம் ஓய்வூதியர்கள் பலரை அதிருப்தி அடையச் செய்துள்ளது.




எனினும் பிரேசிலின் பொருளாதார சரிவை தடுக்கும் வகையில் ஓய்வூதிய திட்டத்தில் சீர்திருத்தம் அவசியம் என்பதில் அரசு திடமாகவுள்ளது.

இந்நிலையில் அரசுக்கு எதிராகவும் ஓய்வூதிய திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சீர்திருத்தங்களுக்கு எதிராகவும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## ட்ரம்பின் திருத்தியமைக்கப்பட்ட புதிய பயணத்தடைக்கும் தடை

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் திருத்தியமைக்கப்பட்ட புதிய பயணத்தடை உத்தரவினை அமுல்படுத்துவதற்கு ஹவாய் நீதிபதி தடை விதித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு முதல் ட்ரம்பின் திருத்தியமைக்கப்பட்ட பயணத் தடை உத்தரவு அமுல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், ஒருமணிநேரம் முன்னதாக ஹவாய் மாநில நீதிபதி டெரிக் வட்ஸன் இந்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை கருதி மேற்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் கேள்விக்குரியதாகவே இருப்பதாக நீதிபதி தெரிவித்துள்ளார்.

ட்ரம்பின் இந்த திருத்தியமைக்கப்பட்ட புதிய பயணத்தடை உத்தரவின் பிரகாரம் சூடான், சிரியா, சோமாலியா, ஈரான், லிபியா மற்றும் ஏமன் ஆகிய ஆறு முஸ்லிம் நாடுகளிலிருந்தும் 90நாட்களுக்கு மக்கள், அமெரிக்காவிற்கு வருவதற்கு தடை விதிக்கப்பட்டது.

அத்துடன் 120 நாட்களுக்கு குறித்த ஆறு நாடுகளிலிருந்தும் அகதிகள் அமெரிக்காவினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டது.


தீவிரவாதிகள் அமெரிக்காவில் நுழைவதை தடுக்கும் வகையில் இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக ட்ரம்ப் வலியுறுத்தியிருந்தார். எனினும் ட்ரம்பின் இந்த உத்தரவு பாரபட்சமானது என்று பல்வேறு எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

# ஐ.நா. பேரவையுடன் தொடர்ந்து அமெரிக்கா இணைந்திருக்காது

## இராஜாங்க செயலாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கணிசமான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படாவிட்டால் அமெரிக்கா அதில் தொடர்ந்து இணைந்திருக்காது என்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் றெக்ஸ் ரில்லர்சன் எச்சரித்துள்ளார்.



இது தொடர்பாக றெக்ஸ் ரில்லர்சன் எட்டு அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தற்போது நடந்து வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் அமெரிக்கா தொடர்ந்து பங்கேற்கும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள றெக்ஸ் ரில்லர்சன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான காலவரம்பு எதையும் குறிப்பிடவில்லை.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய அமர்வில் சிரியா தொடர்பான சுதந்திர விசாரணை ஆணையத்தை புதுப்பித்தல், ஈரான், வடகொரியா, மியன்மார், சித்திரவதை மற்றும் கருத்து வெளிப்பாடு குறித்த சிறப்பு விசாரணையாளர்களுக்கான ஆணை ஆகியன குறித்து முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், தென்சூடானில் மனித உரிமை ஆணையத்தைப் புதுப்பித்தல், இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதை ஊக்குவிப்பதற்கான ஐ.நா.உதவிகள் தொடர்வதை உறுதிப்படுத்தல் என்பனவற்றையும் வலியுறுத்தியுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலர், இஸ்ரேலுக்கு எதிரான பேரவையின் பக்கசார்பான செயற்பாடுகளுக்கு எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளார். (இ-7)

# மிலேனியம் சவால் திட்டப் பணியகத்தை இலங்கையில் அமைக்கிறது அமெரிக்கா

## அமைச்சரவை அனுமதி

அமெரிக்காவின் மிலேனியம் சவால் ஒத்துழைப்பு திட்டப் பணியகத்தை இலங்கையில் அமைப்பதற்கு, அமைச்சரவை நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

மிலேனியம் சவால் ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 700 டொலரை முதலீடு செய்வதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது.

அபிவிருத்திக்கு இடையூறான பகுதிகள் என்று மிலேனியம் சவால் ஒத்துழைப்புத் திட்டத்தினால் அடையாளம் காணப்படும் பகுதிகளில், கொள்கை உறுதிப்பாடு, தரைவழிப் போக்குவரத்து துறைகளில் இந்த நிதியைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான நிதிகளைப் பெறுவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு இலங்கை நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும்.

ஊழல் எதிர்ப்பு மற்றும் ஜனநாயக தரநியமங்கள் என்பனவற்றில் அரசாங்கம் தோல்வியடையுமானால், மிலேனியம் சவால் நிதியத்தின் உதவிகளை இழக்க நேரிடும்.

இந்த மிலேனியம் சவால் ஒத்துழைப்புத் திட்டத்துக்கான பணியகத்தை உருவாக்கி அதற்கான அதிகாரிகளை நியமிப்பதற்கு இலங்கை அரசாங்கம் 58 மில்லியன் ரூபாவை 2017ஆம் ஆண்டு செலவிட வேண்டும்.

அதுபோன்று 2018ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலும் அதேயளவு தொகை ஒதுக்க வேண்டும் என்றும் அமைச்சரவைப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

உலகளாவிய வறுமை ஒழிப்புத் திட்டத்தின் ஒரு அங்கமாகவே மிலேனியம் சவால் ஒத்துழைப்புத் திட்டத்தை அமெரிக்கா செயற்படுத்தி வருகிறது.

இலங்கைக்கு 2005ஆம் ஆண்டில் இருந்து இந்த திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்ட போதிலும், இதற்குத் தேவையான தரநியமங்களைப் பூர்த்தி செய்யாததால் அது நிறுத்தப்பட்டது.

அண்மையில் இந்த திட்டத்தை மீண்டும் வழங்க அமெரிக்கா முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கொழும்பு துறைமுகத்துக்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

2016 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு வந்த கப்பல்களின் எண்ணிக்கை 5 சதவீதத்தினால் அதிகரித் திருப்பதாக துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் 4,195 கப்பல்கள் துறைமுகத்திற்கு வந்துள்ள நிலையில் 2016 ஆம் ஆண்டில் துறைமுகத்திற்கு வந்த கப்பல்கள் எண்ணிக்கை 4405 ஆக அதிகரித்துள்ளதாக துறைமுக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு 3,643 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தில் 3,804 கொள்கலன்கள் துறைமுக பிரிவினால் கையாளப்பட்டுள்ளன.



இதன் காரணமாக கொள்கலன்களின் எண்ணிக்கை 4% அதிகரித்துள்ளதாக துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நேரமின்மையும் மனமின்மையும்

“அதுக்கெல்லாம் எது சார் நேரம்?”

“வரணும் தான் பார்க்கிறேன். முடியுதே இல்லை!”

பதில் போடணும். போடணும்னு நினைச்சுக்கிட்டே இருந்தேன். நீங்கள் வந்துட்டீங்க! ஹிஹிஹி என்பன போன்ற சப்பைக் கட்டுகளையெல்லாம் பலரும் தினமும் சொல்லக் கேட்கிறோம். இவை ஏற்க முடியாத வாதங்கள்.

சிலபேர், போகணும், பார்க்கணும் முடிக்கணும் எழுதணும் என்று சொல்லிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் நகரவே மாட்டார்கள். இதற்கு என்ன தான் காரணமாக இருக்க முடியும்?

நினைப்பில் ஆழமில்லை, தீவிரமில்லை என்பது தான் முதற் காரணம். நமக்கு ஒரு விடயத்தில் ஆர்வமிருக்கட்டும்! வேலைகளைக் கொடுத்துக் கொண்டும், தூக்கத்தைத் தியாகம் செய்தும் எப்படி முடிக்கிறோம்! இடைஞ்சல்களைக் கொஞ்சமாவது இலட்சியப்படுத்துகிறோமா? இல்லை.

ஆக, இதிலிருந்து என்ன தெரிகிறது? எதில் நமக்கு? ஈடுபாடு இருக்கிறதோ அதை மட்டுமே சாதிக்கிறோம். மற்றவற்றிற்கு அருமையாகச் சாக்குப் போக்குத் தேடுகிறோம்.

வீட்டு மின்சாரக் கட்டணத்தில் ஏதோ தவறு. அந்தப் பகுதி மின் வாரியத்திற்குப் போய்ப் பார்த்து கடிதம் எழுதி, புகார் தந்து நமக்கு நினைத்த மாத்திரத்திலேயே மலைப்புத் தட்டுகிறது. இந்த மலைப்புணர்வு காரணமாக ஆர்வம் குறைகிறது. யாரும் கேட்டால் நேரமில்லை என்று நொண்டிச்சாக்குத் தேடுகிறோம். போய்ப்பார்த்தேன் அவர் இல்லை என்று பொய் புனையவும் தயங்குவது இல்லை.

உண்மையாகவே நேரமில்லாதவர்களும் உண்டு. ஆனால் இவர்கள் நினைத்தால்கூட நேரம் ஒதுக்க முடியும். சிலர் ஒரு வேலையை முடிக்க ஒட்டுமொத்தமாகச் சில மணி நேரம் அப்படியே லாட்டாகக் கிடைக்க வேண்டும் என எதிர்பார்கிறார்கள். இது ஒரு தவறான போக்கு.

வெளிநாட்டு நண்பருக்குக் கடிதம் போட வேண்டும். ஏரோகிராம் இல்லை. தபால் நிலையம் போய் வாங்கி வர வேண்டும்.

அப்புறம் அவரது விலாசத்தை தேட வேண்டும். அவர் நம்மூரில் முடிக்கச் சொல்லியிருந்த வேலை ஒன்றை முடித்து அதையும் அக்கடிதத்தில் எழுத வேண்டும். இந்தச் சூழ்நிலையில் நம்மவர்களுக்கு என்ன நினைப்புத் தெரியுமா? இதற்கெல்லாம் ஒரு முழுநாள் வேண்டும் என்பது. இந்த முழுநாள் கிடைக்காமலேயே போய்விடுவதால் பதிலிடுவதை மூன்று வாரம் தள்ளிப் போடுவார்கள். நேரமில்லை என்பார்கள். தவறு.

யாரையேனும் தபால் நிலையத்திற்கு அனுப்பி ஏரோகிராம் வாங்கி வைத்து விடுதல்; ஒரு பத்து நிமிடம் கிடைக்கும் போது விலாசம் தேடி எடுத்து வைத்து விடுதல்; ஒருசில மணி நேரத்தை செலவழித்து அல்லது அந்தப் பக்கம் போகும் போது நண்பர் சொன்ன வேலையை முடித்து விடுதல் என்று வெவ்வேறு கட்டங்களாக வைத்துக் கொள்ள வேண்டும். வேலை சுலபமாக முடியும். இப்படித்தான் நாம் சாதிக்க நினைக்கிற இலக்கை நோக்கி ஒவ்வொரு காலடியாக எடுத்து வைத்து முன்னேற வேண்டும். இப்படிக் கட்டம்கட்டமாக காயை நகர்த்தினால் எதுவும் சுலபம்.

திரு.வாரியாரும், திரு.கி.ஆ.பெ.யும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் இடுகிறவர்கள். இவர்களது வேலைப்பளுவையும், இவர்கள் மேற் கொள்கிற பயணங்களையும் வயதையும் எண்ணிப் பாருங்கள். இவர்கள் நேரம் இருப்பவர்களா என்ன?

இல்லை. மனமிருப்பவர்கள்.

நேரம் இன்மைக்கும் மனமின்மைக்கும் இருக்கும் இடைவெளி என்பது கைக்கும் வாய்க்கும் உள்ள தூரம் தானே தவிர, அதிகமில்லை.

‘‘நேரமில்லை, நேரமில்லை’’ என்று புலம்புகிறவர்களின் செயலுக்கும் யானை தன் தலையில் மண்ணை வாரிப்போட்டுக் கொள்கிற செயலுக்கும் அதிக வேறுபாடு இருப்பதாக தெரியவில்லை.

**லேனா தமிழ்வாணன்**

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 1

♦ 1-38 வரையான வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

வினா 1 தொடக்கம் 2 வரையுள்ள வினாக்களில் படத்துடன் தொடர்புடைய மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. 
1. இயற்கை 2. இரவு 3. குளிர்மை

02. 
1. காடு 2. மாமிச உண்ணி 3. நன்றியுணர்வு

03. பின்வரும் கட்டங்களில் வேறுபட்ட சொல் இடம்பெறும் கட்டங்களைத் தெரிவு செய்க

| 1. | 2. | 3. |
|---|---|---|
| மாம்பழம் வாழைப்பழம் பலாப்பழம் | தக்காளி வெண்டி மரக்கறி | வட்டம் சதுரம் முக்கோணம் |

04.

| 1. | 2. | 3. |
|---|---|---|
| வைத்தியர் நோயாளி தாதி | ஆசிரியர் அதிபர் மாணவர் | சந்தை வியாபாரி நூலகம் |

♦ தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடையைத் தெரிவுசெய்க.


வண்ண வண்ணப் பூக்களாய்
வானில் சிதறும் தீப்பொறி
விண்ணில் ........................ வேடிக்கை
விழா வென்றாலே வாடிக்கை.

05. மேலே உள்ள பாடலில் குறிப்பிடப்படும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்.
1. தரை 2. விண் 3. கடல்

06. வேடிக்கை நடைபெறும் நாள்.
1. பண்டிகை 2. பௌர்ணமி 3. நோன்பு

♦ 7ஆம், 8 ஆம் வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

07) 3, 43, 543 .................................................
1) 4563 2) 6543 3) 7543


08.  ............................

1. 2. 3.



09. நான்கு சமச்சீர் கோடுகளை மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவுசெய்க.

1. 2. 3.




♦ வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


10. கீரிக்கு - பிள்ளை அதுபோல நெல்லுக்கு............
1. கன்று 2. குட்டி 3. நாற்று


11. தொப்பிக்கு தலை எனின் கைக்கடிகாரத்திற்கு
1. கால் 2. கை 3. கழுத்து


12. சாதாரண வருடம் ஒன்றின் இறுதிக் காலாண்டில் வரும் நாட்களின் எண்ணிக்கை.
1. 180 2. 100 3. 92

13. பங்குனி மாதம் 31 ஆம் திகதி வியாழக்கிழமை எனின் அம்மாதத்தில் வரும் செவ்வாய்க்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத்தொகை.
1) 75 2) 80 3) 85


14. 



15. 



♦ வகுப்பறை ஒன்றில் உள்ள மாணவர்களுக்கு விருப்பமான காலை உணவு பற்றிய தகவல்கள் பின்வருமாறு.





16. பிட்டை மட்டும் விரும்புவோர்
1) 19 2) 9 3) 12

17. தோசையையும் இடியப்பத்தையும் விரும்புவோர்
1) 3 2) 7 3) 1

18. மழை பெய்தால் நிலம் நனையும்
மழை பெய்துள்ளது. ஆகவே,
1. நிலம் நனையவில்லை 2. நிலம் காய்ந்துள்ளது 3. நிலம் நனைந்துள்ளது.

19. எல்லாப் பிள்ளைகளும் மழலை பேசுவார்கள். பாலா மழலை பேசுவான். ஆகவே பாலா ஒரு மழலை, என்னும் கூற்று..........
1. சரியானது 2. தவறானது 3. கூற முடியாது

20. வடக்கிற்கும் மேற்கிற்கும் இடைப்பட்ட திசையின் எதிர்த்திசை யாது?
1. தென்கிழக்கு 2. தென்மேற்கு 3. வடமேற்கு

21. 



குமரன் பாடசாலைக்குச் சென்ற திசை ஒழுங்கு முறையினைத் தெரிவு செய்க.

1. மேற்கு → தெற்கு → வடகிழக்கு → கிழக்கு
2. தெற்கு → வடகிழக்கு → மேற்கு → கிழக்கு
3. மேற்கு → வடகிழக்கு → தெற்கு → வடக்கு

22) 20 ஆம் நூற்றாண்டின் ஐந்தாம் தசாப்தத்தில் வரும் ஆண்டு.
1) 1955 2) 1946 3) 2046

23) 2001 ஆம் ஆண்டு வரும் நூற்றாண்டு
1) 19 ஆம் நூற்றாண்டு 2) 20 ஆம் நூற்றாண்டு 3) 21 ஆம் நூற்றாண்டு

24) மைதானம் ஒன்றைச் சுற்றி சம இடைவெளியில் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இரண்டு கம்பங்களுக்கிடையிலான தூரம் 10 மீற்றர். 150 மீற்றர் சுற்றளவுள்ள மைதானத்திற்கு நடப்பட்டுள்ள கம்பங்கள் எத்தனை?
1) 14 2) 16 3) 15

25. 


1) 18 2) 16 3) 25

26.


| 6 | 5 | 4 |
|---|---|---|

| 4 | 6 | 8 |
|---|---|---|


| 3 | .... | 11 |
|---|---|---|

1) 14 2) 7 3) 8

27. குறைவான தீக்குச்சிகளைக் கொண்டு உருவாக்கக் கூடிய உரோமன் எண்
1) X 2) VI 3) XIX

28. 

இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை?
1) 33 2) 36 3) 18


29. 

இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை.
1) 5 2) 9 3) 12

30) 11 - 20 வரையுள்ள இரட்டை எண்களின் எண்ணிக்கை.
1) 3 2) 6 3) 5

31. மகளின் வயது தாயின் வயதின் $\frac{2}{6}$ பங்காகும். மகளின் வயது 8 எனின் தாயின் வயது?
1) 48 2) 24 3) 16

32. பின்வரும் எழுத்துக்களைக் கண்ணாடியில் பார்க்கும்போது மாற்றமின்றித் தெரியும் எழுத்துக்கள்.
1. T, Q 2. R, A 3. V, A

33. 

இக் கடிகாரத்தைக் கண்ணாடியில் பார்க்கும் போது கண்ணாடியில் தோன்றும் நேரம்.
1) 2.00 மணி 2) 2.45 மணி 3) 10.10 மணி


34. விமலின் மகள் திவாணி, சந்திரனின் மகன் விமலன் எனின் சந்திரனின் மனைவியை திவாணி அழைக்கும் முறை.
1. அம்மா 2. பாட்டி 3. மாமி

35. ஒரு நாளைக்கு 5 தடவை மேசைக்கரண்டியால் எடுக்க வேண்டிய மருந்தை தேக்கரண்டியால் எத்தனை தடவை எடுக்க வேண்டும்?
1) 25 2) 6 3) 10

36. கட்டடம் ஒன்று கட்டி முடிப்பதற்கு 20 மாதங்கள் தேவை. இக்கட்டடம் 2015 தை மாதம் கட்ட ஆரம்பிக்கப்பட்டால் அவ் வேலை முடிவடையும் காலம்?
1) 2016 தை 2) 2016 ஆவணி 3) 2017 பங்குனி

37) 415, 315, 515 இவ்வெண்களை மூன்றால் வகுக்கும் போது மீதியின்றி வகுபடும் எண்?
1) 415 2) 315 3) 515

♦ 39-40 வரையான வினாக்களுக்குச் சரியான விடையினை எழுதுக.

38) 


பாத்திரம் A யை முழுமையாக நிரப்புவதற்கு பாத்திரம் B ஆல் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்?
1) 4 தடவை 2) 5 தடவை 3) 6 தடவை

39. அடைப்பில் உள்ள எழுத்துக்களைத் தெரிவு செய்து பழம் ஒன்றின் பெயரை எழுதுக.

| | | |
|---|---|---|
| ன் | ப | சி |
| மா | ம் | ழ |
| பூ | னா | அ |

........................

40. எழுத்துக் கூட்டங்களில் மறைந்துள்ள பழமொழியைத் தெரிவுசெய்து எழுதுக.
அ, ஆ, க, னை, பா, க்கு, வ, ம், அபவடிக், பூசுறுக்குன்ம்

.............................................................................

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 2

01. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

சத்தம் தொடர்ந்து போட்டிடுமே!
நித்தம் வெளியில் காட்டிடுமே!
தத்தித் தத்திச் சென்றிடுமே!
தண்ணீர் என்றால் ஒன்றிடுமே!

பாம்பைக் கண்டால் நடுங்கிடுமே!
பாய்ந்தே ஓடி ஒடுங்கிடுமே!
வீம்பாய்க் கத்திக் கெட்டிடுமே!
விரோதி கண்ணில் பட்டிடுமே!

நதியில் நீச்சல் அடித்திடுமே!
நாக்கால் பூச்சி பிடித்திடுமே!
அதிகம் பேசி ஆடிடுமே!
அழிவை அதுவே தேடிடுமே.

I. இப்பாடல் எப்பிராணி பற்றிக் கூறுகிறது?

.....................................................................

II. தண்ணீர் என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.

.....................................................................

III. அஃறிணைப் படர்க்கை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக.

.....................................................................

IV. ஆக்கத்தை என்ற சொல்லின் எதிர்ப்பதம் யாது?

.....................................................................

V. வினையெச்சச் சொல் ஒன்று எழுதுக.

.....................................................................

VI. ஆறு என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

.....................................................................

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக?

I. நேற்று ........................................ பெய்தது (மலை, மழை, மளை)
II. "......................செய விரும்பு" என ஔவையார் பாடினார். (அறம், அரம், மறம்)
III. மாகாணத்தை நிர்வகிப்பவர் ..................... (ஆலுநர், ஆழுனர், ஆளுநர்)

03. பின்வரும் சொற்களில் உள்ள உயிர்க்குறிகளை எழுதுக.

I. பரீட்சை : ................................................
II. கோபம் : ................................................

04. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

I. அடம்பன் கொடியும் ........................................................
II. ............................................................ சிலையில் எழுத்து

05. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

I. அடியொற்றுதல் :- .....................................................
II. கண் மலர்தல் :- .....................................................

06. பின்வரும் உவமைத் தொடர்களின் கருத்தை தரும் விடையின் கீழ்க் கீறிடுக.

I. அடியற்ற மரம் போல :- மயங்குதல், மூல பலம் அற்றது
II. நகமும் தசையும் போல :- ஒற்றுமை, பகைமை

07. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

I. அமைதியாக / கொண்டிருக்கிறது / ஓடிக் / கங்கை / மாணிக்க

.....................................................................

II. உழைப்பும் / பாஸ்டரின் / உள்ளவனுக்கு / உறுதியும் / கொள்கையாகும் / வெற்றி திண்ணம் /என்பது

.....................................................................

.....................................................................

08. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

I. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் : ...............................
II. முனிவர்கள் வாழும் இடம் : ...............................

09. பின்வரும் வாக்கியத்தை பன்மை வடிவிற்கு மாற்றி எழுதுக.


I. வயலில் முள் இருந்தது. ...............................


10.1. பின்வரும் பாடல் வரிகளைப் பூர்த்தி செய்க.

I. குருவிக் கூடு சிறியது
குஞ்சு வாழச் சிறந்தது
உருவிற் சிறிய கூடுதான்
...............................................

II. இடர்வரும் போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
.......................................... - மாந்தர்
உறவு கொள்வர் அப்பா

11. அ) பின்வரும் உருக்களின் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

I.  ...............

ii.  ...............

II. பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
உன்னால் எனக்கு உதவ முடியுமா?

.....................................................................


12. அ) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான சிங்களச் சொற்களை அவற்றின் உச்சரிப்பில் தமிழில் எழுதுக.

i. சோறு :- ...............................................
ii. பதினைந்து :- ...............................................

ஆ) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. பஸ் எக்க ஆவா. ...............................................

13. பின்வரும் படத்தினை அவதானித்து ஐந்து சொற்களுக்குக் குறையாத எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாக அமையக் கூடியவாறு மூன்று வாக்கியங்கள் எழுதுக.



1)...............................................................
2)...............................................................
3)...............................................................

14. 1) 16 070 என்பதை சொற்களில் எழுதுக.

.....................................................................

2)

| | |
|---|---|
| 6 | |
| 3 | 5 |

| | |
|---|---|
| 3 | 4 |
| 2 | |

மேலுள்ள இரண்டு கட்டங்களில் இருந்தும் ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?


.....................................................................

3) ஒன்றிற்கும் ஐந்திற்கும் இடைப்பட்ட இலக்கங்களைக் கூட்டி வரும் விடையை உரோம எண்ணில் எழுதுக.

.....................................................................

4) அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i. 7960, 7975, 7990, ...............................
ii. 4000, 3500, 3000, ...............................

5) 

இவ்வுருவில் உள்ள செங்கோணம் அல்லாத கோணங்களின் எண்ணிக்கை யாது?

.....................................................

6) i. கூட்டுக. $\frac{2}{5}+\frac{1}{3}$ =...........

ii. $1\frac{3}{10}$ தசமத்தில் எழுதுக. ...............................


7) 1 மணித்தியாலம் 45 நிமிடங்கள் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்று பி.ப 5.00 மணிக்கு முடிவடைந்தது.

i. போட்டி முடிவடைந்த நேரத்தை நியம நேரமாக மாற்றி எழுதுக.

.....................................................

ii. போட்டி ஆரம்பமான நேரம் யாது?

.....................................................................

8) 

நிறந் தீட்டப்பட்ட பகுதியின் பரப்பளவு 1 சதுர சென்ரிமீற்றர் எனின் முழு உருவின் சுற்றளவு யாது? ................

9) 90l கொள்ளக் கூடிய பாத்திரம் ஒன்றில் $\frac{2}{3}$ பங்கு நீர் உள்ளது. பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு 10l கொள்கலனால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்?

.............................................

10) 400g பருப்பின் விலை ரூபா 28.00 எனின் 750g பருப்பின் விலை யாது?

.....................................................................

யாழ்ப்பாண பொதுநூலகம்



# நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை தென்கொரியாவுக்கு விளக்கம்



இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் தென்கொரிய வெளிவிவகார அமைச்சருக்கு வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் கொழும்பில் நடத்தப்படவுள்ள இருநாட்டு வெளிவிவகார அமைச்சுகளுக்கும் இடையிலான அரசியல் கொள்கை வகுப்பு கலந்துரையாடல்கள் தொடர்பிலும் இருநாட்டு அமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தென் கொரிய வெளிவிவகார அமைச்சர் யுன் பியுங்சே உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் காலை நாட்டை வந்தடைந்தார்.

31 வருடங்களின் பின்னர் கொரிய குடியரசின் வெளிவிவகார அமைச்சர் ஒருவரது இலங்கைக்கான விஜயம் அமைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

1986 ஆம் ஆண்டில் அப்போதைய தென் கொரிய வெளிவிவகார அமைச்சர் லிவொன் கியுங் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைக்கும் கொரியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் பூர்த்தியாவதை அடையாளப்படுத்தும் நோக்கில் கொரிய வெளிவிவகார அமைச்சரின் இந்த விஜயம் அமைந்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 40 வருட நிறைவை நினைவுகூறும் வகையில் வெளிவிவகார அமைச்சில் விசேட நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவிற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சினால் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

அதன்பின்னர் தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் நினைவு பதிவேட்டில் கையெழுத்திட்டதோடு, இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டார்.

பேச்சுவார்த்தையின் பின்னர் இராஜதந்திர உறவின் 40 வருட நிறைவை நினைவுகூறும் இலட்சினையை வெளிவிவகார அமைச்சர்களால் திரை நீக்கம் செய்யப்பட்டது. அதன் பின்னர் இரு தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் இருநாட்டு அமைச்சர்களும் கையெழுத்திட்டதோடு, இருவரும் இணைந்து ஊடக சந்திப்பினையும் நடத்தினர்.

இந்த வருகை மூலம் இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை மேம்படுத்தும் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (இ-7)

# ஜெனிவா பிரேரணையை செயற்படுத்த கால அவகாசம் கோருவதில் சந்தேகம்

## முன்னாள் அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்



2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை செயற்படுத்த இலங்கை மேலும் இரு வருடங்கள் கால அவகாசம் கோரியிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மனித உரிமை மீறப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்த வெளிநாட்டு நீதிபதிகளை நியமிக்கும் முயற்சியை சர்வதேச நாடுகள் இன்னும் கைவிடவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பொறளை வஜிராராம மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட அவர்,

வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்கப் போவதில்லை என ஜனாதிபதியும் பிரதமரும் கூறி வருகின்றனர். எனினும் ஜெனிவா பிரேரணையின் ஆறாவது பிரிவில் வெளிநாட்டு நீதிபதிகளை நியமிப்பது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறானால் குறித்த பிரிவை மாற்ற வேண்டுமெனவும் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதியின் ஆட்சியில் அதற்கான அவகாசம் உள்ளதாகவும் அதனை பயன்படுத்த முடியுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார நெருக்கடியுடன் பொருட்கள் சேவைகளின் விலைகள் உயர்ந்து வருவதாகவும் எட்கா ஒப்பந்தம் ஊடாக தேசிய வளங்களை விற்பனை செய்வதற்காக பேச்சுவார்த்தை கைச்சாத்திட பேச்சுவார்த்தையும் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலை தொடர்ந்து ஒத்திவைத்து வருவதோடு ஆர்ப்பாட்டம் நடத்த தனியான பிரதேசம் அறிவிக்க எடுக்கப்படும் முயற்சிகள் அடக்குமுறைக்கான எதிரொலிகளே எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் அபகீர்த்திக்குள்ளாகும் போது எதிர்க்கட்சி தலைவர் தான் எதிரணிகளின் தரப்பு தலைவராக செயற்படுவதாகவும் எனினும் உலகில் எந்த எதிர்க்கட்சி தலைவரும் செய்யாதவாறு அரசின் வரவு- செலவுத்திட்டத்தை எதுவித திருத்தமும் இன்றி ஆதரித்த ஒரே எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தனே எனவும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1016

Search for people, places and things · Nagendram · Home

**டினா**




**நாதன்**




**சுபி**





**சர்மிலா**




**மகி**




**சனோ**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மனிதாபிமானப் பொறுப்புக்களை இனங்கண்டு செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

சட்டத்தின் மூலம் அரசாங்கம் மேற்கொள்ளும் முகாமைத்துவத்தை விடவும் தமது மனிதாபிமான பொறுப்புக்களை இனங்கண்டு நடவடிக்கை எடுப்பதற்கு உணவு, பானங்கள் உள்ளிட்ட மக்களுக்கு தேவையான ஏனைய நுகர்வுப் பண்டங்களை வழங்கும் அனைத்து நிறுவனங்களும் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

உணவு ,பானங்கள் உள்ளிட்ட ஏனைய நுகர்வு பண்டங்களின் தரம் நாட்டு அபிவிருத்தியின் முக்கிய அளவுகோலாக இருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி கொழும்பு தொடக்கம் நாடு முழுவதுமுள்ள உணவக சமையலறைகளில் அந்த தரம் மற்றும் தூய்மையை காண முடியாதெனவும் தெரிவித்தார்.

சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நடைபெற்ற மாநாட்டின் நிறைவு நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


"டிஜிட்டல் யுகத்தில் நுகர்வோர் உரிமைகள்" எனும் தலைப்பில் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. டிஜிட்டல் தொழிநுட்பத்தின் ஊடாக நுகர்வோர் பெறும் பல்வேறு சேவைகளை மேலும் நம்பிக்கைமிக்க, பாதுகாப்பானதாக மாற்றுவது இலக்காகும்.

இலங்கையில் டிஜிட்டல் நுகர்வோர்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக புதிய கொள்கைகளை தயாரிப்பதற்குத் தேவையான அடிப்படையை உருவாக்குவதும் இந்த மாநாட்டின் பின்னர் எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி நவீன தொழில்நுட்பத்துக்கு உட்பட்டதுடன் அந்த அபிவிருத்தி எமக்கு எளிதாக இருந்தபோதிலும், அது பெரும்பாலம் ஒட்டுமொத்த சமூகத்தின் அழிவிற்கே பயன்படுத்தப்படுகிறது.

நவீன தொழில் நுட்பத்தை மானிட சமூகத்தின் நன்மைக்காக பயன்படுத்துவது அறிவுள்ள பிரஜைகளின் பொறுப்பாகும் எனவும், நவீன தொழில் நுட்பம் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பிலும் எதிர்காலத்தில் மிகப் பரந்தளவில் பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். (இ-7)

## எதியோப்பியாவுக்கான இலங்கையின் முதலாவது வதிவிடத் தூதுவர் பதவியேற்பு



எதியோப்பியாவுக்கான இலங்கையின் முதலாவது வதிவிடத் தூதுவராக சுமித் தசநாயக்க தனது கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டதாக இலங்கை வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. இவர், ஆபிரிக்க யூனியனுக்கான இலங்கைப் பிரதிநிதியுமாவார்.

எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவில் அந்நாட்டு ஜனாதிபதி முலட்டு தெஷோமியைச் சந்தித்து தனது நியமனக் கடிதத்தைக் கையளித்தார் சுமித் தசநாயக்க. இதன்போது, இலங்கை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மக்களின் வாழ்த்துக்களையும் அவர் பரிமாறினார்.

இவரது பதவியேற்பு நிகழ்வு அந்நாட்டின் தேசிய மாளிகையில் ஒரு சிறு விழாவாக நடத்தப்பட்டது. இதன்போது சுமித்தசநாயக்கவுக்கு இராணுவ மரியாதையும் வழங்கப்பட்டது.

இலங்கை - எதி யோப்பியா இடையேயான அரசியல் உறவுகள் 1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. எனினும், எதி யோப்பியாவுக்கான வதிவிட தூதுவர் ஒருவர் இதுவரை காலமும் நியமிக்கப்பட வில்லை.

எனினும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் உத்தியோகபூர்வ விஜயத்தையடுத்து கடந்த மாதம் இலங்கைத் தூதுவருக்கான அலுவலகம் எதியோப்பியாவில் அமைக்கப்பட்டது. (இ-7)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: B/7094 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 44 செவ் 4 இல்<br>உயரம்: 153cm<br>தகைமை/தொழில்: சித்தவைத்தியர்<br>தொ.இ: G/4742 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/7095 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 20 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4748 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/விவசாயம்<br>தொ.இ: B/7096 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 44 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MA விரிவுரையாளர்<br>தொ.இ: G/4749 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 42 செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/ தொழில்: சிவில் பொறியியலாளர் லண்டன் PR<br>தொ.இ: B/7097 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 36 செவ் 8 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:BSc,MSc தனியார் தொழில்<br>தொ.இ: G/4751 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.







சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் பயணிகள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

படங்கள்: தெல்லிப்பழை செய்தியாளர்.

## ஆடம்பர சிறைச்சாலை திறக்கப்படவில்லை





இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள ஆடம்பர சிறைச்சாலை இன்னமும் திறக்கபடவில்லை எனவும், திறப்பு விழா பிற்போடப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை அங்குண கொளபெலஸ்ஸ சிறைச்சரலையின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்படாத காரணத்தினாலும், முழுப் பூர்த்தியுடனான கட்டடங்களை திறப்பதற்கு உத்தேசித்துள்ளதாலும், குறித்த சிறைச்சாலையை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் திறப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் சுமார் 58 ஏக்கர் காணியில் சுமார் 5 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள குறித்த ஆடம்பர சிறைச்சாலையானது, வைத்தியசாலை, கைத்தொழில் கூடங்கள், அலுவலர்களுக்கான தங்குமிட கட்டட தொகுதிகள், பிரமாண்ட விளையாட்டு மைதானம் மற்றும் விசாலமான நீச்சல் தடாகம் என்பனவற்றை உள்ளடக்கி அமைக்கப்பட்டு வருகிறது. (இ-7)

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தகவல் முறைமை கருத்தரங்கு யாழில்

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை கருத்தரங்கு எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இல.1220, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள செல்வ மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் திருமதி கல்யாணி தஹநாயக்க கலந்து கொள்ளவுள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி தொடர்பான நடைமுறைகள் கணனிமயப்படுத்தல் முறைக்கு உள்வாங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வரி செலுத்துதல், வரிக் கோவைகளை ஆரம்பித்தல், வருமான வரி விபரத்தினை சமர்ப்பித்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயனடையுமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய ஆணையாளர் பந்துல ஹப்புதந்திரிகே அறிவித்துள்ளார். (இ-3)

## நூல்வெளியீடு

தகளஸம்ங்காரம் ஆபஸ்தம்ப அபர பிரயோகம் எனும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணியளவில் கொக்குவில் மேற்கு சொர்ண சித்தி விநாயகர் ஆலயத்தில் ப.சிவானந்த சர்மா தலைமையில் இடம்பெறும். (இ)





யாழ். நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர் பவானி சுகுமார் கலந்து கொண்டார்.



தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேச இளைஞர் கழக சம்மேளன அங்குரார்ப்பண வைபவம் நேற்று முன்தினம் 11ஆம் திகதி சனிக்கிழமை சித்தங்கேணியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும் நாடா வெட்டி திறந்து வைப்பதையும் பதிவு செய்யப்பட்ட 20 கழகங்களுக்கான சான்றிதழ் வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மகாலிங்கம்)

# பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் நினைவுப் பேருரை நிகழ்வு



த.ஸ்ரீஸ்கந்தராஜா மாலை அணிவிக்கின்றார்

(யாழ்ப்பாணம்)


மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயத்தில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவுப் பேருரை இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் க. எழிலழகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி முதல்வருமாகிய ச.லலீசன் மட்டுவில் பெற்ற மாமணி என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றினார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வித்துறையின் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும் பண்டிதமணியின் உறவினருமாகிய த.ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து கொண்டார். பண்டிதமணியின் நினைவுநாளையொட்டி பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.


பரிசில்களை ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா, சொற்பொழிவாளர் ச.லலீசன், ஓய்வுநிலை ஆசிரியர் ந.அம்பிகைப்பிள்ளை ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். நிகழ்வில் அயற் பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், மட்டுவிலில் உள்ள பண்டிதமணியின் உறவினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (இ-3)

## உலக டவுண் ஸின்றம் தினம்

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக விசேட கல்விப் பிரிவினரால் நடத்தப்படும் உலக டவுண்ஸின்றம் தினம் எதிர்வரும் (World Down Syndrome Day) 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)



தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரத்ததான நிகழ்வு இடம் பெற்றது. இதில் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். -(படம்:-கிஷோர்)



யாழ்.நாகர் கோவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம் பெற்றது. விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்பு நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## நூல் வெளியீட்டு விழா

புயலின் நான் ஓர் எழுத்தாளன் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம் பெறும். பேராசிரியர் ம.இரகுநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் இ.கிருஷ்ணராசன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணனி போதனாசிரியர் வி.வினோதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-3)

## ஒக்டோபர் புரட்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழுவின் ஒக்டோபர் புரட்சியினைப் பாதுகாத்தலும் இன்றைய தொடர்பும் நிகழ்வு நாளை 18ஆம் திகதி மாலை 4 மணிக்கு இல.361, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள D.M.I கல்வி நிறுவனத்தில் இடம் பெறும் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் இடம்பெறும்.இந்நிகழ்வில் ஆரம்ப உரையினை சொ.சிவபாலன் நிகழ்த்துவார். (இ-3)

## விழிப்புணர்வு வீதி நாடகம்

(யாழ்ப்பாணம்)

உலக நீர்தினத்தை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய ஊழியர் தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தில் இரத்த தான நிகழ்வு இடம்பெறும். மேலும் யாழ். மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் குடிநீர் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகமும் இடம்பெறும். (இ-3)

# பொன்.ராதா மீது காலணி வீச்சு



டில்லியில் மரணமடை ந்த ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர் முத்து கிருஷ்ணனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற மத்திய இணையமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் மீது காலணி வீசப்பட்டது. இது தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

டில்லியில் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண் டதாகக் கூறப்படும் ஜவஹர் லால் நேரு பல்கலைக்கழக மாணவர் முத்து கிருஷ்ணனின் உடல், அவரது சொந்த ஊரான அரிசி பாளையத்தில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது உடலுக்கு அர சியல் கட்சித் தலைவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின் றனர். இந் நிலையில் நேற்றுக் காலையில் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்த பா.ஜ.கவைச் சேர்ந்த மத்திய இணையமைச்சர் பொன் ராதா கிருஷ்ணன் சென்றார்.

அப்போது அங்கு கூடியிருந்த இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், விடுத லைச் சிறுத்தைகள் கட்சி ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோஷமிட்டனர்.

இதற்குப் பிறகு பொன்ராதா கிருஷ்ணன் பத்திரிகையாளர்களைச் சந்திப்பதற் காக தயாரான போது, அவர் மீது அங்கிருந்த ஒருவர் தனது காலணியைக் கழற்றி வீசினார். இதையடுத்து காலணியை வீசியவரை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். (இ-12)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை

யா/ அச்செழு மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் க. குகதாசன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி,சிறப்பு விருந்தினராக முன்னாள் ஓய்வு நிலை அதிபர் க. சின்னராசன்,கௌரவ விருந்தினராக ச.மகேந்திரன் (பழைய மாணவர்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)




யாழ். பிராந்திய சுகாதார திணைக்களம் ,சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவை இணைந்து நடத்திய பொலித்தீன் பாவனையை மட்டுப்படுத்துவோம் சூழலுக்கு நேயமான பொருட்களின் பாவனையை ஊக்குவிப்போம். எனும் கருப் பொருளில் நேற்று முன் தினம் புதன் கிழமை நடைபவனி ஒன்று இடம் பெற்றது. இதில் பாடசாலை சமூகத்தினர், லீயோ கழகம், வலி. தென்மேற்கு இளைஞர் கழக சம்மேளனம்,பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

படங்கள் :தெல்லிப்பழை செய்தியாளர்.




காங்கேசன்துறை தையிட்டி வள்ளுவர் புரத்தில் வசிக்கும் கேரிதா பிரதீப் எனும் 10வயதுடைய சிறுவன் நுரையீரல் பாதிப்புக்கு உள்ளானான். இச் சிறுவனுக்கு உதவிகள் வழங்குமாறு கோரப்பட்டது. அதற்கமைய இச் சிறுவனுக்கு(Feed The Poor) உணவளிப்போம் அமைப்பால் இரண்டு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான DEVIL BISS.5LITRE OXYGEN CONCENTRATOR , 11 Litre oxygen Cylinder with regulator (To use during power cut ) Nebulizer machine, Bed and mattress (கட்டில் மெத்தை) Toys போன்ற உயிர் காக்கும் உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டன.




# நம்பிக்கை வாக்கெடுப்பில் மனோகர் பாரிக்கர் வெற்றி

கோவா சட்டசபையில் நேற்று (வியாழக்கிழமை) நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் அம்மாநில முதல்வர் மனோகர் பாரிக்கர் வெற்றி பெற்றுள்ளார்.

இந்த வாக்கெடுப்பில் 22 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவாகவும், 16 பேர் எதிராகவும் வாக்களித்தனர். ஒரு உறுப்பினர் வாக்களிப்பை புறக்கணித்திருந்தார்.


இதனையடுத்து, அரசு பெரும்பான்மையை நிரூபித்துள்ளதாக சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது.



கோவா சட்டசபை தேர்தல் முடிவுகளில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காததை அடுத்து, சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுள்ள பா.ஜ.க. ஆட்சியமைக்க தீர்மானித்தது.

இதையடுத்து, கோவா மாநில ஆளுநர் மிருதுளா சின்ஹாவை சந்தித்த மனோகர் பாரிக்கர், தனக்கு 22 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக தெரிவித்து ஆட்சியமைக்க அழைக்குமாறு உரிமை கோரிய நிலையில், தன்னுடைய பெரும்பான்மையை நிரூபித்துள்ளார். (இ-12)

# விஷப்பாம்பு அடித்துக் கொலை



நெல்லியடி பொலிஸ் நிலையத் திற்குள் புகுந்த கொடிய விஷப் பாம்பு ஒன்றினை பொலிஸார் அடித் துக் கொன்றனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன் கிழமை அதிகாலை இடம் பெற் றது. கடமையில் இருந்த பொலி ஸார் இக் கொடிய விஷப்பாம்பை கண்டுள்ளனர். சுமார் நான்கு அடி நீளம் உள்ள இவ் விஷப்பாம்பு முத்திரைப்புடையன் என அழைக்கப்படு வதாகவும் இது தீண்டினால் மர ணம் நிச்சயம் நிகழும் எனவும் பொது மக்கள் தெரிவித்தனர். (இ-3-60)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 30 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 20 | 100 | 120 | 120 | 100 | 120 |
| தக்காளி | 50 | 40 | 40 | 30 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 100 | 70 | 60 | 60 | 80 |
| கோவா | 20 | 40 | 20 | 30 | 30 | 40 |
| கரட் | 80 | 60 | 40 | 60 | 60 | 100 |
| பூசணி | 60 | 40 | 35 | 50 | 50 | 60 |
| புடோல் | 80 | 60 | 40 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 80 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 150 | 200 | 80 | 60 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 50 | 100 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 100 | 50 | 50 | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 | 80 | 100 | 80 | 160 |
| லீக்ஸ் | 40 | 100 | 60 | 80 | 60 | 80 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 140 | 100 | 90 | 80 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 400 | 300 | 600 | 800 |
| போஞ்சி | 120 | 200 | 60 | 120 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 40 | 30 | 30 | 20 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 50 | 100 | 80 | 80 |
| தேங்காய (ஒன்று) | 60 | 60 | 20-50 | 70 | 65 | 50-60 |
| இராசவள்ளி | 200 | 300 | 160 | 20 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 100 | 60 | 40 | 50 | 60 | 160 |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 50 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 15 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 60 | 60 | 80 | 60 |

# முதலீடுகளை மேற் கொள்ள தென்கொரியா ஆர்வம்

### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு


இலங்கையில் ஆய்வு தொடர்பான அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தென்கொரியா தயாராக இருப்பதாக அந்நாட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் யுன் பியுங் சே தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அலரி மாளிகையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது தென்கொரிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில் இலங்கை மெகா பொலிஸ் திட்டத்தில் முதலீடு மேற்கொள்வதற்கு தென்கொரியா தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான புரிந்துணர்வை மேம்படுத்துவதற்கு இந்த விஜயம் பெரிதும் உதவியதாக தென்கொரிய அமைச்சர்தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கம், சமாதானம் ஆகியவற்றுக்காக சமகால இலங்கை



அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கு தென்கொரிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பாராட்டுத் தெரிவித்தார்.

வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு தண்ணீர பவுசர்கள் உள்ளிட்ட ஏனையவற்றை வழங்குவதற்கு தென்கொரிய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. மேலும் கொரியாவில் பணியாற்றும் இலங்கையர்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

# ஆறு மேஜர்களின் பெயர்கள் பரிந்துரை

இராணுவத்தின் இரண்டாம் நிலை அதிகாரியான, பணியாட் தொகுதி தலைமை அதிகாரியை நியமிப்பதற்காக இராணுவத்தில் சிரேஷ்டத்துவ மட்டத்தில் இருக்கின்ற மேஜர்ஜெனரல்கள் ஆறு பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவின் சிபாரிசுக்கு அமைவாக, அவர்களின் பெயர்கள் அடங்கிய ஆவணம் முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐந்து நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு, இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா, நேபாளத்துக்கு கடந்த 14ஆம் திகதியன்று பயணமாகியுள்ளார். இந்நிலையில், இந்த சிபாரிசு தொடர்பிலான ஏனைய ஆவணங்கள், இராணுவ செயலகத்தின் ஊடாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கருணாசேன ஹெட்டியாராச்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (இ-7)

பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவாது
ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது.

- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## படித்துப் பட்டம் பெற்றதால் இப்பரிதாப நிலையோ!

உத்தியோகத்தில் இருப்பவர்களை விட மாணவர்களாக இருப்பவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகம்.

ஒரு மருத்துவரை விட, மருத்துவ பீட மாணவனுக்கான மதிப்பு அதிகம்.

இதேபோல பொருளியலாளரை விட, பொருளியல் பீட மாணவனுக்கான மதிப்பு அதிகம்.

ஆசிரியராக, அரச உத்தியோகத்தராக இருப்பவர்களைவிட பல்கலைக்கழக மாணவர்களாக இருப்பவர்களுக்கு எமது சமூகம் கொடுக்கின்ற மதிப்பு மிகவும் உயர்வானது.

இதற்குக் காரணம் என்னவெனில் கற்றுக் கொண்டிருத்தல் என்பது என்றும் உயர்வானதும் மரியாதைக்குரியதும் என்பதுதான்.

ஒரு பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் மீது மாணவர்கள் சிலர் குறை கூறுகின்றனர். ஆனால் அந்த ஆசிரியர் மீது எந்தத் தவறும் இல்லை.

இருந்தும் கல்வி நிர்வாகம் ஆசிரியரை இடமாற்றம் செய்கிறது. அல்லது ஆசிரியருக்கே தண்டனை கொடுக்க முற்படுகிறது.

அட, இது நீதியா? நியாயமா? என்றால் அது நீதிதான். நியாயம்தான்.

ஏனெனில் மாணவர்களுக்கே பாடசாலை ஆசிரியர்களைவிட மாணவர் சமூகத்தின் கோரிக்கைக்கே முன்னுரிமை. இஃது எங்கும் இருக்கக்கூடிய ஒரு வழமை.

இந்த வழமையின் போக்கு மாணவப் பருவத்தோடு போய்விடுவதாலும்தான் மாணவர்களாக இருக்கின்ற காலம் ஒரு மனிதனின் வாழ்க்கையில் மறக்க முடியாத காலமாகப் போற்றப்படுகிறது.

ஆனால் பல்கலைக்கழக மாணவர்கள் என்ற பருவத்தை முடித்து பட்டதாரிகள் என்று வெளிவந்து விட்டால் அவ்வளவுதான்.

இருந்த மதிப்பு, மரியாதை அனைத்தும் அடியோடு போய்விடுகிறது.

அதிலும் தமிழ்ப்பட்டதாரிகள் என்றால் அந்தோகதிதான். யாழ்ப்பாண செயலகத்துக்கு முன்பாக வட மாகாண ஆளுநரின் அலுவலகத்துக்கு அண்மையாக, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகரில் என பட்டதாரிகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருப்பர். அதையாரும் கண்டுகொள்ள மாட்டார்கள்.

ஐயா! நான்கு வருடங்கள் பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றதால் உண்ணாவிரதமா?, கவனயீர்ப்புப் போராட்டமா? இதென்ன அநியாயம்?

பசித்திருந்து தனித்திருந்து விழித்திருந்து படித்தால், பசியின்; தனிமையின்; விழிப்பின் முதலெழுத்துக்கள் ஒன்றுகூடி பதவியைத் தரும் என்று நம்பித்தானே படித்தனர்.

ஆனால் இக்காலத்தில்; பதவியை, உத்தியோகத்தைப் பெறுவதற்கு நம் பட்டதாரிகள் படும் கஷ்டத்தைப் பார்க்கும் போதெல்லாம் மனம் வேதனையில் தத்தளிக்கிறது.

சிங்கள மாணவர்கள் பட்டம் முடித்ததும் படைத் தரப்பில், பொலிஸ் பிரிவில், விமான நிலையத்தில், கலால் படையில், வன இலாகாப் பிரிவில், வருமானம் மற்றும் வரியமைப்பு உள்ளிட்ட அரச பணிகளிலும் ஏகப்பட்ட தனியார் நிறுவனங்களிலும் வேலைக்கு அமர்ந்து விடுகின்றனர்.

ஆனால் எங்கள் தமிழ்ப் பட்டதாரிகளுக்கு ஒன்றில் ஆசிரியப் பணி அல்லது முகாமைத்துவ உதவியாளர் பதவி. இதைவிட்டால் வேறு எதுவும் இல்லை என்றாயிற்று.

இந்த அவலமான நிலையைத் தவிர்க்க வேண்டும். தமிழ்ப் பட்டதாரிகளையும் நாடளாவிய ரீதியிலான அரச பணியில் இணைக்க வேண்டும்.

கொழும்பில் இருக்கக்கூடிய வேலைவாய்ப்பில் நம் பட்டதாரிகளுக்கு இடம்கொடுத்தால் தான் அவர்களும் ஊர் அடிபட்டு, மொழி கற்று தங்கள் ஆளுமையை வளர்ப்பர்.

எனவே இது விடயத்தில் பொறுப்பானவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

# வேலை கோரும் பட்டதாரிகளின் விடயத்தில் கூடுதல் கவனம் தேவை

## வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வேலை கோரும் பட்டதாரிகள் விடயத்தில் அரச உயர் அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் விரைவான நடவடிக்கையை எடுக்க முன்வர வேண்டியது அவசியமானது என யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் தலைவருமான வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

வடமாகாணத்தில் உள்ள அரச வேலையற்றபட்டதாரிகள் நேற்றைய தினம் 18 ஆவது நாளாக தமது போராட்டத்தை யாழ்.மாவட்டச் செயலக முன்றலில் முன்னெடுத்திருந்தனர். அவர்களை சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் தலைவர் மற்றும் செயலாளர் எஸ்.பரமநாதன் ஆகியோர் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இந்நிலையில் அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் உள்ள வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் தமது கோரிக்கைகளை வலியுறுத்திப் பல நாட்களாக தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் தொடர்பில் விரைவான நடவடிக்கையை எவரும் எடுப்பதாக தெரியவில்லை. நான் யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தராக இருந்த வகையில் இந்த பட்டதாரி மாணவர்களது நிலை தொடர்பாக அவதானிக்கும் போது மிகவும் வேதனையாகவுள்ளது.

இந்த மாணவர்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் தமது பட்டப்படிப்பை நிறைவு செய்திருந்தும் இவர்களுக்கு பல ஆண்டுகளாக வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. இவ் விடயம் தொடர்பில் உரியவர்கள் கவனம் செலுத்தாமல் இருப்பது வேதனை அளிக்கிறது .

இன்று இந்த பட்டதாரிகளை சந்தித்து அவர்களுடைய கஷ்டங்கள், கோரிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டோம். அது தொடர்பில் வடமாகாண ஆளுநரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தோம்.

அக்கலந்துரையாடலின் போது, அரச பதவி வெற்றிடங்களை தற்போது தாம் சேகரித்து வருவதாகவும் அதன் பின்னர் பட்டதாரிகளுக்குரிய தீர்வினை பெற்றுக்கொடுப்பதாகவும் எமக்கு ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும்வேலைவேண்டிநிற்கும் பட்டதாரிகள் தொடர்பில் உயர் அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் உரிய கவனம் எடுப்பது அவசிமானதாகும்.

அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை விரைந்து வழங்க உயர் மட்டங்களில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டும். அவர்கள் பல ஆண்டுகளாக வேலை வாய்ப்பின்றி பல கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். அதிலும் குறிப்பாக பெண் பிள்ளைகள் வேலைவாய்ப்பற்று பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

எனவே அவர்களின் நலனில் அக்கறை கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (செ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### குறை ராட்டினம்

வாழ்க்கையை முழுமையாக வாழ்வது ஒரு குறை ராட்டினத்தில் சுற்றுவது போன்றது. அங்கே சுழற்சி, வேகம், துணிச்சல் உள்ளது.

நீ மன இறுக்கத்துடன் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு திருப்பத்தையும் எதிர்த்தால், நீ முடிவில் சோர்வும், துன்பமும் உணர்வாய். நீ விளையாடுவதற்காகவும் உன் பாதுகாப்பிற்காகவும் இந்தக் குறை ராட்டினத்தை (வாழ்க்கையை) அமைத் திருக்கின்றாய் என்று நம்பிக்கை கொண்டு மனதில் ஓய்வுடன் இருந்தால் நீ சிலிர்ப்பையும் சக்தியையும் மகிழ்ச்சியையும் உணர்வாய்.!

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**சூரிய நமஸ்காரத்தின் பலன்கள் என்ன?**

முதல் சேவையினால் படிப்படியாக அறிவு உண்டாகிறது. அதிகாலைச் சூரியனின் கிரணங்கள் உடலில் படும்போது உடலுக்கு புத்துணர்வும் சக்தியும் செய்திறனும் கிடைக்கிறது.




சூரிய ஒளிக்கு கிருமிகளை அழிப்பதற்கான சக்தி உள்ளது. தாவரங்கள் சிறப்பாக வளர்வதும் உயிரினங்களுக்கு ஏற்ற வகையில் இயற்கை வளங்களை மாற்றுவதும் சூரிய வெளிச்சம்தான்.

பிராமணர்கள்சூரியனை வணங்குவதற்கென தனி விதிகள் உள்ளன. அவர்கள் சூரியனை பிரமாவாக கற்பனை செய்து வணங்குகிறார்கள் தியானத்தின் மூலமாகவும் நமஸ்காரத்தின் மூலமாகவும் ஏனைய பிற முறைகளிலும் அனைவரும் சூரியனை வணங்குவதால் அமைதி காக்கப்படுகிறது.

அதனால் சூரிய நமஸ்காரம் அனைவருக்கும் ஏற்றதாகும். அது வெறும் ஆசாரம் மட்டுமல்ல ஞான மார்க்கமும் முக்தி மார்க்கமும் ஆகும்.


(தொடரும்)

## திவ்விய மஹோற்சவம்

யாழ்ப்பாணம்வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி ஆலய (வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்) திவ்விய மஹோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் பெரிய நீலாச்சேன்ன, இத்திக் கண்டல், சொர்ணபுரி, பாப்பாமோட்டை, அடம்பன், பரப்பாங் கண்டல், அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உண்மையான விரதம் எது?

விரத காலத்தில், வெறும் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருப்பதே உயர்வானது. அப்படி இருக்க இயலாதவர்கள் பாலும் பழமும் அருந்தலாம்.

சமஸ்கிருதத்தில் "ஃபல்' என்றால் பழம் என்று பொருள்படும்.

"ஆஹார்' என்பது ஆகாரம் அல்லது உணவு என்பதாகும். "ஃபல் ஆஹார்' ஸ்ரீ பலஹார் என்று ஆகிறது. பழத்தை உணவாகக் கொள்வதே பலகாரம் என்பதாயிற்று.

இதற்குப் பதிலாக சாதம் தவிர்த்த பலவித ஆகாரங்களைச் சாப்பிடுவது தான் "பலகாரம்' என்ற சொல்லின் பொருளாக இக்காலத்தில் கருதப்படுகிறது. இது தவறு. இது உண்மையான விரதம் ஆகாது.

ஜீரண உறுப்புகளுக்கு ஓய்வு கொடுத்து, உடலைப் புதுப்பிப்பதே விரதத்தின் நோக்க மாகும். எனவே சிற்றுண்டிகளைச் சாப்பிட்டு விரதம் இருப்பதை விட, பழங்களையும் பாலையும் மட்டும் அருந்தி விரதம் இருப்பதே சிறந்ததாகும்.




### உண்மையான செல்வம் எது?

❖ எவர் மென்மையை இழந்து விடுகிறாரோ, அவர் நன்மைகள் அனைத்தையும் இழந்து விடுகிறார்.

❖ செல்வவளம் என்பது அதிக செல்வத்தைப் பெறுவதல்ல. போதுமென்ற மனதைப் பெறுவதே உண்மையான செல்வம்.

❖ பூமியில் செருக்குடன் நடக்காதீர். ஏனெனில், உம்மால் பூமியைப் பிளந்துவிட முடியாது. மலையளவுக்கு உயர்ந்து விடவும் முடியாது!

❖ செயல்கள் அனைத்தின் விளைவுகளும் எண்ணத்தைப் பொறுத்தே அமைகின்றன. மனிதன் எதை எண்ணுகின்றானோ அதற்குரிய பலன் தான் அவனுக்குக் கிட்டும்.

❖ இறைவன் உங்கள் உருவங்களையோ உங்கள் செல்வங்களையோ பார்ப்பதில்லை, மாறாக உங்கள் உள்ளங்களையும், செயல்களையும் தான் பார்க்கிறான்.


❖ நெருப்பு விறகை அழித்துவிடுவது போல் பொறாமை நற்செயல்களை அழித்து விடுகின்றது.

❖ கொடுமைக்குள்ளானவனின் பிரார்த்தனைக்கு அஞ்சுங்கள். ஏனென்றால், அந்தப் பிரார்த்தனைக்கும் இறைவனுக்குமிடையில் திரை கிடையாது.

(இறைவனால் விரைந்து ஏற்றுக் கொள்ளப்படும்)

- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து

# மத்திய கல்லூரி வெற்றி



யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் யாழ்.. மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் அணி 31ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி துடுப்பாட்டத்தை மேற்க் கொண்ட போது 38.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 165 ஓட்டங்களை பெற்றனர். வினோத்குமார் 19, அவன்ராஜ்-39 ,செல்ரன்-16, எடின்- 32 , ஜேம்ஸ்-18 ஓட்டங்களைப் பெற்றனர்.

அருச்சுனர்-04, கானாமிர்தன்-3,ரஜீன்தன்-2, கிலன்-1 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ்கல்லூரிபழைய மாணவர்கள் அணி 38.4 ஓவர்களில் 134 ஓட்டங்களைப் பெற்றனர். நிமால் -11, கானாமிர்தன் -33, ரஜீன்தன்-19, அகிலன் -20, கரி பிரவீன்-15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி பழைய மாண வர் அணி சார்பாக ஜெரிக்-02, மயூரன்-1, சலன்ராஜ்-02, ஜேம்ஸ்-3, பார்வின்-2 இலக்குகளைக் கைப்பற்றினர். மேற்படி போட்டி 1975 ஆண்டில் இருந்து நடை பெற்றவருவது குறிப்பிடத் தக்கது. (க)

# 2ம் சுற்றில் சிவானந்தா



வல்வை விளையாட்டு கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில்

கடந்த திங்கட் கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் கரவைச்செஞ்சுடர் வி.கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக் கழகத்தினர் மோதினர்.

நடை பெற்ற போட்டியில் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தினர் 6:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குத் தெரிவாகியுள்ளனர்

இரண்டாவது ஆட்டத்தில் ஆதிசக்தி A அணி வருகைதராத காரணத்தால் கருணாகரன் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (க)

# வடமராட்சி வலய மட்ட கடற்கரை கரப்பந்தாட்டம்



வடமராட்சி வலய மட்ட பாடசாலைகளுக் கிடையிலான கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது தொண்டைமானாறு வீரகத்தி பிள்ளை மகா வித்தியாலயம்

13-03-2017 அன்று வல்வை உல்லாச கடற்கரையில் இடம் பெற்ற வடமராட்சி வலய கடற்கரை கரப்பந்தாட்ட இறுதி போட்டியில்

ஆண்கள் பிரிவில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வரா கல் லூரி மோதியது. இறுதி ஆட்ட முடிவில் 2.0 என்ற நேர் செட்கணக்கில் வெற்றியீட்டி சம்பியனானது தொண்டைமானாறு வீரகத்திபிள்ளை மகா வித்தியாலயம். (க-60)

# வலி தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக 2017ம் ஆண்டுக்கான கிரிக்கெட் போட்டி





மாகியப் பிட்டி சம்பியன்

வலி தென் மேற்கு பிரதேச இளைஞர்கழக சம்மேளனத்தின் 2017ம் ஆண்டுக்கான இளைஞர்விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றது.

இதன் முதல் அங்கமாக கிரிக்கெட் போட்டிகள் இடம் பெற்றது.

05.03.2017 காலை 8.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் முதல் சுற்றுப் போட்டிகள் அணிக்கு 6 பேர்5 ஓவர் கொண்டதாகவும் இறுதிப்போட்டி அணிக்கு 11பேர் 10 ஓவர் கொண்டதாகவும் இடம் பெற்றது.

16 இளைஞர் கழக அணிகள் பங்குபற்றிய போட்டிகளில் மாகியப்பிட்டி இளைஞர் கழகம் சம்பியனாகியது.

இடம்பெற்ற அரையிறுதியில் சண்டிலிப்பாய் வடக்கு இளைஞர்கழக அணியினை வென்று மாகியப்பிட்டி இளைஞர் கழகமும், மானிப்பாய் கிழக்கு இளைஞர்கழக அணியினை வென்று மானிப்பாய் வடக்கு இளைஞர் கழகமும் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

இறுதிப் போட்டியில் நாணயற்சுழற்சியில் வென்ற மாகியப்பிட்டி இளைஞர் கழகம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

மாகியப்பிட்டி இளைஞர் கழகம் சரத்குமாரின் அதிரடி கைகொடுக்க 10 ஓவர்களில் 6 விக்கட்களை மட்டும் இழந்து 106 ஓட்டங்களை குவித்தது.

மாகியப்பிட்டி இளைஞர் கழகம் சார்பில் சரத்குமார் ஆட்டமிழக்காமல் 8 ஆறுகள் அடங்கலாக 64 ஓட்டங்களையும், ரங்கன் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் வடக்கு இளைஞர் கழகம் சார்பில்நிருபன் 2 விக்கட் களையும், வத்சலன் மற்றும்சியாள்ஸ்தலா ஒவ்வொரு விக்கட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 108 என்னும் இமாலய இலக்கோடு துடுப்பெடுத்தாட களமிறங்கிய மானிப்பாய் வடக்கு இளைஞர் கழகம் ஆரம்பத்தில் அதிரடி காட்டினாலும் மாகியப்பிட்டி இளைஞர் கழக அணி போட்டியின் இறுதிப் பகுதியை கட்டுக்குள் வைத்திருந்ததால் 2[illegible] ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மானிப்பாய் வடக்கு இளைஞர் கழகம் சார்பில் துடுப்பெடுத்தாட்டத்தில் ஆதித்தன் அதிரடியாக 32 ஓட்டங்களையும், நவநீதன் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மாகியப்பிட்டி இளைஞர் கழகம் சார்பில் லதுஜன் மற்றும் சுரேஷ் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக்கைப்பற்றினர். (க)

# வடமராட்சி வலயப் பாடசாலைகளுக் கிடையிலான 18வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டம்

## வீரகத்திப்பிள்ளை மகாவித்தி. சம்பியன்



வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 18 வயதுப்பிரிவினருக்கான கரப்பந்தாட்டப்போட்டி அண்மையில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது

இவ் விறுதியாட்டத்தில் தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயமும் உடுப்பிட்டி அ. மி கல்லூரியும் மோதின.

3 செட்களைக்கொண்ட இவ்வாட்டத்தில் முதல் இரு செட்களையும் 25:17 25:22 என தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் வெற்றி பெற்று சம்பியனாகியது

இப்பிரிவில் மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி பெற்றது. (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் சென்.அன்ரனிஸ் வெற்றி



யாழ்ப்பாணம், வலிகாமம் ,பருத்தித்துறை வடமராட்சித் தீவகம் ஆகிய லீக்குகளின் அனுமதியுடன் நடைபெறும் புதிய விடியல் உதைபந்தாட்ட போட்டியில் கடந்த திங்கட் கிழமை அன்று அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடை பெற்றது.

பரபரப்பாக நடை பெற்ற போட்டியில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து போட்டியிட்ட பெரியவிளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்சமநிலை தவிர்ப்பு உதை மூலம் 03:02 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரு அணிகளும் இறுதி வரை எதுவித கோல்களையும் போடாத நிலையில் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் பெரியவிளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியை தனதாக்கியது.

அடுத்த சுற்றினில் யாழில் பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றான குருநகர் பாடும் அணியினை எதிர்த்து இன்று பெரியவிளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# வல்வை வி.கழகத்தின் கடல் விளையாட்டுக்கள்

வல்வை விளையாட்டுக் கழகத்தின்57 ஆவதுஆண்டை முன்னிட்டு நடத்தும் கடல் விளையாட்டுக்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் நடை பெறவுள்ளது.

ஆண்களுக்கான நீச்சல் போட்டி , 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீச்சல் போட்டி, கட்டு மரம் வலித்தல் போட்டி மற்றும் வட்டி ஓட்டம் போட்டி என்பன நடை பெறவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## தென்.மீனவர்க...

தகவல் வெளியிட்டுள்ள உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவிக்கையில்,

செம்மலை- நாயாற்றுப்பகுதியில் மீனவமக்களை நானும் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும் நேற்று முன்தினம் சந்தித்தோம்.

தென்பகுதி மீனவர்கள் வருகை பற்றியும் முன்னைய எழுபத்தெட்டுப்படகுகளைத்தவிர கூடுதலாக இன்றுவரை இருநூற்று மூன்று படகுகளுக்கு கொழும்பிலிருந்து அனுமதிகள் கிடைத்துள்ளதாகவும் அதில் இருபத்து மூன்று படகுகளை நாயாற்றின் முகத்துவாரத்தின் ஊடாக நீரேரியில் நிறுத்தி வைப்பதற்கான முயற்சியை மேற்கொள்வதாகவும் தமிழ் மீனவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

இந்நிலைமைகளால் தாம் மேலும் துன்பப்பட வேண்டி வரும் என்பதையும் அவர்கள் எம்மிடம் சுட்டிக்காட்டினார்கள்.

இவ்விடயங்கள் தொடர்பில் நாம் அவர்களை ஆறுதற்படுத்தியதோடு மீனவர்கள் சார்பாக மூவர் கடற்றொழில் அமைச்சரை சந்திப்பதற்கான ஏற்பாட்டினை மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வடக்கு முதலமைச்சர் ஊடாக இது விடயத்தை நடுவண்ணரசுக்கு தெரியப்படுத்துவதாக நானும் தெரிவித்தேன் என ரவிகரன் தெரிவித்தார்.

இதற்கு சரியான தீர்வு கிடைக்காதிருப்பின் தாங்கள் பாரியளவிலான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என தமிழ மீனவர்கள் எச்சரித்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

## அரசாங்கம்...

யின் முக்கிய உறுப்பினருமான மகிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதோடு, ஊழலில் ஈடுபட்டுள்ள முக்கியமான 10 உறுப்பினர்களில் 9 பேர் தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

இந்நிலையில் நேற்றைய தினம் இது தொடர்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று கொழும்பில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமகே தமது முறைப்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் இதுவரை விரிவான விசாரணைகளை முன்னெடுக்கவில்லை என குற்றம்சாட்டினார்.

அவர் மேலும் கூறுகையில்,

பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, குற்றப்புலனாய்வு திணைக்களம் ஆகியவற்றிற்கு முறைப்பாடு செய்துள்ளோம். எனினும் பிணை முறி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் மாத்திரமே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் விசாரணைக் குழு ஒன்றை அமைத்தமையையிட்டு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிணை முறி கொடுக்கல் வாங்கலில் 21 பில்லியன்களே தொடர்புபட்டுள்ளது. எனினும் எஞ்சிய 115.5 பில்லியன்கள் தொடர்பில் அரசாங்கம் இதுவரை அவதானம் செலுத்தவில்லை. இது தொடர்பில் உடனடி கவனம் செலுத்துமாறு அரசாங்கத்தை கேட்கின்றோம். சுங்கத் திணைக்களம் தொடர்பில் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் இதுவரை விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

ஊழலில் முன்னணி வகிக்கும் நாடுகளின் தரப்படுத்தலில் இலங்கை முன்னிலை பெற்றுள்ளது. இலங்கையில் ஊழல் அதிகரித்துள்ளமையை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது தனியார் நிறுவனமுமே இந்த நாட்டை ஆட்சி செய்கின்றது. இந்த 9 முறைப்பாடு களில் ரவி கருணாநாயக்க, மலிக் சமரவிக்கிரம மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு தலா மூன்று முறைப்பாடுகளில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் பிணை முறி கொடுக்கல் வாங்கல தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மாத்திரமே இந்த அரசாங்கம் ஆடையுடன் காணப்படுகின்றது. இல்லையேல் நிர்வாணமாகவே வீதியில் செல்ல வேண்டியிருக்கும் என மகிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார். (செ-11)

## டெங்கு தாக்கம்...

பிராந்தியத்தில் 900 பேரும், கல்முனை பிராந்தியத்தில் 733 பேரும், அம்பாறை பிராந்தியத்தில் 100 பேர பாதிப்புக்குளானதாகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீரின் விசேட வேண்டுகோளுக்கு அமைவாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் தலைமையில் டெங்கு நோய் பரவது தொடர்பாக சுகாதார, உள்ளூராட்சி மன்ற திணைக்கள உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்றினை நேற்று ஏற்பாடு செய்திருந்தது.

இதற்கமைய, கிழக்கு மாகாண திருகோணமலை பிரதேசத்தில் அதிகம் பரவும் டெங்கு நோயை தடுப்பது தொடர்பாகவும், அதனை தடுப்பதற்கு மேற்கொள்ளவுள்ள விசேட திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

குறிப்பாக திருகோணமலை பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்ற திணைக்களங்களும், சுகாதார திணைக்களங்களும் விசேட செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றபோதும் இன்னும் அதன் வேகத்தை அதிகரித்து டெங்கு நோயினை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதுவரை கிண்ணியா பிரதேசத்தில் 12 பேர் மரணித்ததுடன் குச்சவெளியில் ஒருவரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருவரும் மரணித்துள்ளார்கள்.

குறிப்பாக கிண்ணியா பிரதேசத்தில் அதிகளவு இந்த டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்பு படையினருடனும், உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுடனும் இணைந்து செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்நிலையில் கிண்ணியா பிரதேச பாடசாலை மாணவர்களின் வரவு அண்மைக் காலமாக 40 சதவீதத்துக்கும் குறைவாக காணப்பட்டமையால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(செ-11)

## இராணுவத்துக்கு...

த்து கோரவிருப்பதாக முல்லைத்தீவு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது

இதற்கமைய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் சிலரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் உத்தரவிடப்பட்டது.

கேப்பாப்பிலவிலுள்ள இராணுவத்தினரது வசமிருக்கும் தங்களது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி கடந்த 16 நாட்களாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவ முகாமுக்கு முன்பாக இப்போராட்டம் நடத்தப்பட்டு வருவதால் தங்களது பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு மீதான விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் எஸ்.எம்.எஸ். சம்சுதீன் முன்னிலையில் இடம்பெற்றது.

மன்றில் முன்னிலையாகியிருந்த முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மக்களின் போராட்டத்தினால் இராணுவம் எதிர்கொண்டுள்ள நெருக்கடி தொடர்பாக தெளிவுபடுத்தினார்.

எனினும் இப்போராட்டத்தில் உள்ள நியாயமான காரணங்களை மன்றில் எடுத்துக் கூறிய மக்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி திருக்குமரன், மக்களிடம் இருந்தும் கருத்துக்களைப் பெற நீதிவான் அனுமதியளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், நேற்றைய தினம் மக்களிடம் இருந்து கருத்துக்களைப் பெறவுள்ளதாக அறிவித்ததோடு வழக்கை நேற்று வரை ஒத்தி வைத்தது. இந்நிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மக்கள் சார்பாக சட்டத்தரணி திருக்குமரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் அனைவரும் இனைந்து மக்களின் போராட்டத்தின் நியாயத்தை எடுத்து கூறினர்.

இருதரப்பினரதும் சாட்சிகள், கருத்துக்கள், ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்த நீதவான் மேற்படி உத்தரவை பிறப்பித்து 14 நாட்களுக்கு இது நடைமுறையில் இருக்கும் என தெரிவித்தார். (செ-281)

## சர்வதேச நீதிபதி...

வெளிவிவகார அமைச்சில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

சர்வதேச நீதிபதிகள் என்பது இலங்கை தொடர்பான பிரேரணையில் முன்வைக்கப்பட்டுள்ள ஒரு பரிந்துரை மட்டுமேயாகும். அதனை கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் எமக்கில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பகரமான தீர்வை வழங்குவதே எமது எதிர்பார்ப்பாகும். அதனை நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம். நாம் முன்வைத்த வேலைத்திட்டத்திற்கே அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ளன.

காணாமல்போனோருக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிவதற்கான தேவை எங்களுக்கும் இருக்கிறது. உண்மையை நாம் கண்டுபிடிக்கவேண்டும். அதற்காகவே காணாமல்போனோர் அலுவலகத்தை அமைத்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எமது நாட்டின் நீதித்துறை கடந்த காலங்களில் சுயாதீனத்தன்மையை இழந்து காணப்பட்டமையே இந்தக் கோரிக்கைக்கான காரணமாகும். எமது நீதித்துறை கடந்த காலங்களில் சுயாதீன நிலையை இழந்து இருந்தது. ஆனால் நாங்கள் கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் சுயாதீன நீதித்துறையை கட்டியெழுப்பியிருக்கிறோம்.

நல்லிணக்கத்திலும் பொறுப்புக்கூறலிலும் முன்னேற்றத்தை வெளிக்காட்டுவதற்கு நாங்கள் இரண்டு வருடகால அவகாசத்தைக் கோரினோம். அந்த கால அவகாசம் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

விசாரணைப் பொறிமுறைக்கு சர்வதேச நீதிபதிகளை கொண்டுவருவதற்கு எமது தற்போதைய அரசியலமைப்பில் இடமில்லை. எனவே அரசியலமைப்பை மீறி வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டுவந்து விசாரணை நடத்த நாம் தயாராக இல்லை. எனவே நாங்கள் உள்ளக நீதிபதிகளைக் கொண்டே விசாரணைப் பொறிமுறையைக் கொண்டுவருவோம்.

தெற்கு மக்கள் காணாமல் போனபோது மகிந்தவுக்கு ஜெனிவா போகமுடியும் என்றால் வடக்கு மக்கள் பற்றி நாம் சிந்திக்க வேண்டியது அவசியம்.

இலங்கையில் ஜோசப் முகாம் என்ற சித்திரவதை முகாம் இருந்ததாக ஜஸ்மீன் சூகா குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். அவரை நான் இலங்கைக்கு வந்து உண்மை நிலையைப் பார்வையிடுமாறு கூறியிருந்தேன். அதன் பின்னரே சித்திரவதைகள் தொடரான ஐ.நா.வின் விசேட நிபுணரை இலங்கைக்கு அழைத்து அனைத்து இடங்களையும் சென்று பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கினோம்.

அதன்படி அவர் ஜோசப் முகாமிற்கும் சென்று பார்வையிட்டு விட்டு அவ்வாறு சித்திரவதை முகாம் எதுவும் இல்லையெனக் கூறினார். கடந்த காலத்தில் சித்திரவதை முகாம்கள் இருந்திருக்கலாம் என்ற குற்றச்சாட்டை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் தற்போது சித்திரவதை முகாம் என்று எதுவும் இல்லை என்பதை சுட்டிக்காட்டுகிறோம். அதனால் தற்போது ஜஸ்மின் சூகாவிற்கு மீண்டுமொரு முறை இலங்கை வருமாறு அழைப்புவிடுக்கின்றோம். இலங்கை வந்து உங்களுக்குத் தேவையான அனைத்து இடங்களையும் பார்வையிடலாம். சித்திரவதை முகாம் இருக்கின்றதா இல்லையா என்பதை கண்டுபிடிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## இலங்கையில் குற்ற...

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 34 ஆவது கூட்டத்தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அமர்வில் இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய போது சிறுபான்மையின விவகாரங்கள் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் ரீட்டா ஐசாக் நாடியா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தனதுரையில் குறிப்பிடுகையில்,

போருக்குப் பின்னரான ஒரு நாட்டில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு உண்மையைக் கண்டறிதல், காயங்களை ஆற்றுதல் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் அவசியம்.

இலங்கையில் குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமை தொடர்ந்து காணப்படுகின்றது. இது சமூகங்களுக்கு மத்தியில் நம்பிக்கையீனத்தை அதிகரித்துள்ளது.

தமிழ், முஸ்லிம், இந்தியத் தமிழர்கள் மற்றும் சிறு அளவிலான சிறுபான்மை மக்கள் திட்டமிடப்பட்ட சமூக மற்றும் அரசியல் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகின்றனர். விசேடமாக சிறுபான்மைப் பெண்கள் உண்மைக்கும், நல்லிணக்கத்துக்காகவும் போராடுகின்றனர்.

இலங்கையின் சிறுபான்மை மக்களை பாதுகாப்பதற்கான வலுவான வேலைத் திட்டங்களை முன்வைப்பதில் தனது அர்ப்பணிப்பை இலங்கை அரசாங்கம் வெளிக்காட்ட வேண்டும். விசேடமாக சிறுபான்மை மக்களை பாதுகாப்பதற்கான ஆணைக்குழு ஒன்றை இலங்கை அரசாங்கம் உருவாக்க வேண்டும்.

தமிழ், முஸ்லிம் சமூகங்களில் தாக்கம் செலுத்தும் விடயங்களான வடக்கிலிருந்து படையினரை அகற்றுதல், காணாமல் போனோர் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எந்தவொரு சமூகத்திற்கும் அநீதி ஏற்படாத வகையில் சமத்துவம் நிறுவன ரீதியாகவும், சட்டரீதியாகவும் உறுதிப்படுத்த வேண்டும். சிறுபான்மை மக்களை பாதுகாப்பானவர்களாக உணரவைப்பது சமூகங்களுக்கு இடையிலான பதற்றத்தை தணிக்க உதவும்.

எனவே தேசிய நல்லிணக்கத்தை அடைவதற்காக நான் முன்வைத்த பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் தெளிவான குறிக்கோளுடனும், சிறந்த கட்டமைப்புடனும் கால அட்டவணையுடனும் நடைமுறைப்படுத்தும் என எதிர்பார்க்கின்றேன் என ரீட்டா ஐசாக் நாடியா தனதுரையில் மேலும் தெரிவித்தார். (செ-11)

## மிதிபலகை பயணம் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த சிற்றூர்தி (மினிபஸ்) வீதியின் அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் சிற்றூர்தியில் பயணம் செய்த ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு மற்றுமொருவர் சிறு காயங்களுக்கும் உள்ளாகியுள்ளார்.

இச் சம்பவம் நேற்று காலை 7.40 மணியளவில் மானிப்பாய் வீதி சண்டிலிப்பாய் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மாதகல் துறைமுகத்தை சேர்ந்த இளைஞனான ஜெயக்குமாரன் சசிகரன் (வயது 27) என்பவர் படுகாயமடைந்தவராவார் மற்றும் சித்தன்கேணியை சேர்ந்த குடும்பஸ்தரான கதிரவேல் ராஜேஸ்வரன் (வயது 50) என்பவரே சிறுகாயங்களுக்கு உள்ளாக நேரிட்டது.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிற்றூர்தியில் அதிகளவான பிரயாணிகள் பயணம் செய்த நிலையில் காயமடைந்த இருவரும் மிதி பலகையில் நின்றபடி பிரயாணம் செய்ததனாலேயே மேற்படி விபத்தில் சிக்குண்டதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (செ-30)

# சர்வதேச விசாரணை கோரி...

இலங்கை மீது சர்வதேச விசாரணைப் பொறிமுறையை மேற்கொள்ள வலியுறுத்தி வடக்கு கிழக்கு மாகாணங்கள் தழுவிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்றைய தினம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் காலை பத்து மணியளவில் ஆரம்பமாகி ஊர்வலமாக சென்று அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அந்தந்த மாவட்டங்களில் உள்ள உப அலுவலகத்தின் ஊடாகவும் உரிய அதிகாரிகள் ஊடாகவும் ஜெனிவாவிற்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையின் அமர்வு ஜெனிவாவில் நடைபெற்று கொண்டுள்ள நிலையில், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச விசாரணையே வேண்டும் என்ற முக்கிய கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்த போராட்டத்தில் பொது மக்கள், மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் கலந்து கொண்டு படையினர் வசமுள்ள காணிகளும், பொதுக்காணிகளும் மக்களிடம் மீள கையளிக்கப்பட வேண்டும். இராணுவ மயமாக்கம் நீக்கப்படல் வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உரிய பதில் வேண்டும், மனிதவுரிமை பாதுகாவலர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் மீதான புலன் விசாரணைகள் நிறுத்தப்பட வேண்டும், அரசியல் கைதிகளை விடுதலை செய், பெண்கள் மீதான வன்முறையை ஒழிப்பது பற்றி கூறும் சீடோ சட்டத்தை இலங்கையில் அமுல்படுத்த வேண்டும், சர்வதேச நீதிபதிகள் அடங்கிய சர்வதேச பொறிமுறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் என எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியவாறு கவனயீர்ப்பை முன்னெடுத்தனர்.

அவர்கள் கையளித்த மகஜரில்,

ஐ.நா. இலங்கையின் நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகளில் இணைப்பங்காளியாவதற்கு இலங்கையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும், சர்வதேச நீதிபதிகளைக்கொண்ட நீதிப்பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும், நிலைமாறுகால நீதி சட்டம் உருவாக்கப்பட வேண்டும், நிலைமாறுகால நீதிக்கான அமைச்சகம் உருவாக்கப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோர் பணிக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த ஆவனசெய்ய வேண்டும், அரசியல் கைதிகள் விடுவிப்பு மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை திருத்தி அமைத்தல் சார்ந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் கவனத்திற்கெடுத்து சர்வதேச தராதரங்களுக்கு அமைய இவற்றை நடைமுறைப்படுத்த ஆவனசெய்ய வேண்டும்,

மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான புலன் விசாரணை நிறுத்தப்பட வேண்டும், படையினர் வசமுள்ள மக்கள் காணிகளும் பொதுக்காணிகளும் மக்களுக்கு மீள கையளிக்கப்பட வேண்டும்.

இராணுவ மயமாக்குதல்நீக்கப்பட வேண்டும், தீர்மானம் 30/1 மற்றும் ஆணையாளர் நாயகத்தின் இலங்கை மீதான விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை தாமதமின்றி அமுல்படுத்த ஆவன செய்ய வேண்டும், பெண்கள் மீதான வன்முறையை ஒழிப்பது பற்றிக்கூறும் சீடோவின் பொதுப் பரிந்துரை 19இனையும் தீர்மானம் 1325 இனையும் உள்ளடக்கி சீடோ சட்டத்தை இலங்கை விரைவில் ஏற்படுத்த வேண்டும் எனவும் அந்த மகஜரில் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. (செ-4-9)

# தாஜூடீன் கொ...

10 இராணுவ வீரர்களை விசாரணை வளையத்தில் வைத்து விசாரித்து வருவதாக புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவான் ஜயராம் டொஸ்கிக்கு அறிவித்தனர்.

வஸீம் தாஜுடீன் படுகொலை தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சிறப்பு மேலதிக அறிக்கை ஊடாக புலனாய்வுப் பிரிவினர் இதனை அறிவித்தனர். (செ-11)


## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் நெல்லியடியில்

**SLAS**
(open/Limited)
சனி – 8.30am - 1.30pm
ஞாயிறு– 8.30am - 1.30pm

பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான பரீட்சை
சனி – 8.30am - 1.30pm
ஞாயிறு– 8.30am - 1.30pm

முகாமைத்துவ உதவியாளர் தரம் III (PMA)
ஞாயிறு (கிழமை தோறும்)– 8.30am - 1.00pm

ஆசிரியர் சேவை/ வங்கியாளர்/LAW
ஞாயிறு – 8.30am - 1.30pm

கணக்காளர் சேவை
சனி – 8.30am - 1.30pm
ஞாயிறு– 8.30am - 1.30pm

தொடர்பு– 077 876 0992, 077 344 3962

உயர் கல்லூரி
இல.81, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
(நெல்லியடி சந்திக்கு அருகில்)



## பணிப்பெண் தேவை

சமையல் வேலை உட்பட வீட்டு வேலைகளை வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய 30 வயதிற்குட்பட்ட பணிப்பெண் உடன் தேவை. பருத்தித்துறை, நெல்லியடிக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
பணிப்பெண் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**தொ.பே இல.: 021 226 0277**

கந்தமுருகேசனார் வீதி,
புலோலி தெற்கு, புலோலி.
(8337)



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(சி-7826)



## V2 TRAVELS

தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி




அதிஸ்ட எண் - N/13JAN17/1371/152
**சி.தேவராசா**
கரணவாய், கரவெட்டி
இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜெர்மனிக்கு அனுப்பினார்
நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல
வாய்ப்புக்களுக்கு: **0768226240**
(சி-7796)



## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

**070 330 5500**
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

உங்கள் அனைத்து விதமான பொதிகள் மற்றும் கடிதங்களை நம்பிக்கையுடனும், துரிதமாகவும்,குறைந்தளவு கட்டணங்களுடன் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட நாடுங்கள். (சி-7704)

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | மீசாலை | திருகோணமலை | மல்லாவி |
| முல்லைத்தீவு | கிளிநொச்சி | கனகராயன்குளம் | வவுனியா |



## வேலையாள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள காட்சியறை ஒன்றை நல்ல முறையில் கவனித்துக் கொள்வதற்கு ஆணொருவர் தேவை.
தொடர்பு : **0770256640**
(சி-7821)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும்

## பண்பாட்டுப் பெருவிழா - 2017
## ஆய்வுக் கட்டுரைகளுக்கான அழைப்பு

“கிராமியப்பண்பாடும் மேம்பாடும்” எனும் ஆய்வுப்பொருளில் நடைபெறவுள்ள வட மாகாண ஆய்வரங்கிற்கு ஆய்வாளர்களிடம் இருந்து பின்வரும் விடய தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பிவைக்குமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

- கல்வி
- மருத்துவம்
- குடும்பம்
- சமயம் (வழிபாடு)
- விளையாட்டுக்கள்
- உணவு, உடை, உறையுள்
- கலைகள்
- பொருளாதாரம்
- மொழி, இலக்கியம்

ஆய்வுச் சுருக்கத்தை 300 சொற்களுக்குள் உள்ளடக்கி **உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,செம்மணிவீதி, நல்லூர்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் மூலம் அனுப்புவதாயின் npc.culture@yahoo.com, depofculture.npc@gmail.com எனும் முகவரிக்கு font style Baamini, font size 12 ல் அனுப்பி வைக்க முடியும்.

ஆய்வுச் சுருக்கம் 28.04.2017 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு **021 205 4105** எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

திருமதி வனஜா செல்வரட்ணம்,
உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.
(சி-7829)



## பெயர் மாற்றம்

747273910V எனும் அடையாள அட்டை இலக்கத்தினையுடைய கந்தன் சின்னம்மா என்ற எனது பெயரை இன்று முதல் கந்தன் சாந்தி என பெயர்மாற்றம் செய்துள்ளேன். இன்று முதல் என் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் கந்தன் சாந்தி எனவே பயன்படுத்துவேன் என அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
கந்தன் சாந்தி
(8330)



## வேலையாள் தேவை

கணக்குகள் சரிபார்த்து தருவதற்கு தகுதியுள்ள பெண் ஒருவர் தேவை. பகுதி நேரமாகவோ அல்லது வீட்டில் இருந்தவாறோ சரிபார்த்து தரலாம்.
தொடர்பு : **0770256640**
(சி-7821)



புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree BA, Bcom**
Jaffna University &Peradaniya University
GAQ, BA Part I, Ba Final
ஆரம்பம் :- 01 – 04 – 2017.

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits
ஆரம்பம் :- 25 – 03 - 2017

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accountancy courses**
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. A/L 3 Passes
ஆரம்பம் :- 25 – 03 - 2017

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat** [ Sri Lanka]
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
Medium – Tamil & English

**CERTIFICATE COURSE IN ENGLISH**
14th Batches have successfully Completed the courses 15th batch commences on 1st April 2017.

**Further Details:**
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149
(சி-7827)



## வாடகைக்கு

**வீடு, கடை, அறைகள்**
இடம் : பல்கலைக்கழகச் சந்தி A9 வீதி, திருமுருகண்டி, கிளிநொச்சி.
தொடர்பு : **0770265657, 0776458748**
(சி-7835)



## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்திக்கு அருகாமையில் உள்ள இலங்கை வங்கிக்கு முன்பாக HILUX PICKUP வகை திறப்பு (இரண்டு) 16.03.2017 வியாழக்கிழமையன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
**0776141645, 0770553049**
(8205)



## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# I.C.T

பிரபல ஆசிரியர் T.ஆயவன்
(NDT,HNDIT,BIT)
சனி, ஞாயிறு
A/L 2018 - 7.00am A/L 2019 - 8.00am
A/L 2017 - மீட்டல் வினா விடை 9.00am
ஆரம்பம் : 18.03.2017
குறிப்பு: இணுவில் பொருளியற் கல்லூரியிலும் ஆசிரியரின் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
(சி-7832)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.